**முச்சந்தி முரளி**



"அவரே குண்டும் வைப்பாராம், அவரே அதையே எடுத்து பேரும் வாங்குவாராம் எண்ட கதை மாதிரியெல்லோ உவரின்ர விளையாட்டு இருக்கு கண்டியளோ"


Registered as a Newspaper | பக்கங்கள் 16 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 87

புதன்கிழமை
21 பெப்ரவரி 2024

மாசி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்;
# அரசமைப்புக்கு முரணானது!

### சில பிரிவுகளில் திருத்தம் அவசியம்
### உயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவிப்பு

**கொழும்பு, பெப்ரவரி 21**

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவின் சில பிரிவுகள் அரசமைப்புக்கு முரணான வகையில் உள்ளன என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.**

15

'தமிழரசுக் கட்சிக்காக வாதாடுவேன்'

# பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார் சுமந்திரன்!

### ஜனாதிபதி சட்டத்தரணி தவராஜா விளாசல்

கொழும்பு, பெப். 21

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக, கட்சித் தலைவர் கோரினால் நீதிமன்றத்தில் வாதாடத் தயார் என்று சுமந்திரன் அறிவித்தமையானது சிறுபிள்ளைத்தனமானது என்பதுடன் திசைதிருப்பும் அறிவிப்பாகவும் அமைந்துள்ளது என்று தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

15



## வாள்வெட்டில் ஐவர் காயம்

கிளிநொச்சி, பெப். 21

கிளிநொச்சி, இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம்

15

## இந்தியத் துணைத்தூதரகம் நேற்று முற்றுகைக்குள்!

யாழ்ப்பாணம், பெப். 21

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தடுத்துநிறுத்த வலியுறுத்தி யாழிலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் முன்பாக மீனவர்கள்

15

## டிப்பரின் அதிவேகத்தால் பூநகரிவாசி உயிரிழப்பு

பக்.15




காணாமலாக்கப்பட்டோருக்காக

## கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம்

கிளிநொச்சி, பெப். 21

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக்கோரி, கிளிநொச்சியில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமலாக்கப்பட்டவர்களுக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் ஏழு ஆண்டுகள் முடிவடைந்து எட்டாவது ஆண்டுக்குள் செல்வதை முன்னிட்டு இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

15



காணாமலாக்கப்பட்டோருக்காக

## களமிறங்கிய பிக்கு!

கிளிநொச்சி, பெப். 21

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்காக கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தின்போது பிக்கு

15









**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகார நீக்கம் அரசிடம் திட்டங்கள் இல்லை!



## நீதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.21**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் அரச தரப்பில் இருந்து எந்தவொரு யோசனையும் முன்வைக்கப்படவில்லை. தற்போது அதைச் செய்வதற்கான உத்தேசமும் அரசுக்கு இல்லை. எனவே, தேர்தல் ஒக்ரோபர் மாதமளவில் நிச்சயம் நடத்தப்படும்.**

- இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

"தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க அரசமைப்பில் ஏற்பாடில்லை. அதற்கான தேவைப்பாடும் அரசுக்கு இல்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படுமா என என்னால் கூறமுடியாது. அவ்வாறு நடத்துவதற்கு ஜனாதிபதியால் முடியும். அதற்கான சட்ட பூர்வ அனுமதி அவருக்குள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு மட்டும் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், குறைநிரப்பு பிரேரணை ஒன்றின் ஊடாக பொதுத் தேர்தலுக்கான நிதியைப் பெற்றுக் கொள்ளமுடியும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் நீதி அமைச்சர் என்ற வகையில் நானோ அல்லது அமைச்சரவையில் வேறு எவரோ யோசனை எதையும் முன்வைக்கவில்லை. அதற்கான உத்தேசமும் இல்லை"- என்றார். (எ-44)

# ஹரினின் அறிவிப்பு யாருடைய கருத்து?

## விமல் கேள்வி



கொழும்பு, பெப். 21

இலங்கையானது இந்தியாவின் ஒரு பகுதியென அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ விடுத்துள்ள அறிவிப்பு அரசின் நிலைப்பாடா? அல்லது அவரது தனிப்பட்ட கருத்தா என்பது பற்றி தெளிவுபடுத்த வேண்டும்.

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார்.

இலங்கையானது இந்தியாவின் ஒரு பகுதியென விளையாட்டு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் அறிவித்துள்ளார்.

இது அமைச்சரவையின் கூட்டு அறிவிப்பா? அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடா? இல்லாவிட்டால் அமைச்சரின் தனிப்பட்ட கருத்தா?

அவரது தனிப்பட்ட கருத்தாக இருந்தால், நாடு தொடர்பில் இப்படியான அறிவிப்பை விடுப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் உள்ளதா? என்றும் அவர் கேள்வியெழுப்பினார். (ச-44)

# நாடாளுமன்றமே நாட்டின் இயக்கம்

## சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.21

ஜனநாயகத்தின் இதயம் நாடாளுமன்றம். நாடாளுமன்றம் செயற்படாத நாடு கட்டுப்பாட்டின்றி வழிதவறிச் செல்லும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடாளுமன்றம் செயற்படவில்லை என்றால் நாட்டில் ஆட்சி இல்லை. சட்டவாக்கம் இல்லாமல் நீதித்துறை, நிறைவேற்று அதிகாரம் என்பன தனித்து இயங்க முடியாது. ஒரு நாட்டின் எதிர்காலம் குறித்து முடிவெடுப்பதில் நீதித்துறை, நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் ஆகியன சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன-என்றார்.(எ-இ)

# ரணிலுடன் எனக்கு தனிப்பட்ட தொடர்பு

## பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் தனிப்பட்ட ரீதியிலான அரசியல் தொடர்பு மற்றும் நெருக்கம் இருக்கிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கிறேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தார்.

அவருக்கும் எனக்கும் இடையிலான தொடர்பு அரசியல் ரீதியானது அல்ல. தனிப்பட்ட ரீதியிலானது. அதேவேளை தேசிய மக்கள் சக்தியுடன் (ஜே.வி.பி.) இணைந்து செயற்படும் எண்ணம் எனக்கு இல்லை- என்றார். (ச-6)

# ஹரின் கருத்தால் சர்ச்சை நழுவிய அமைச்சர்கள்

கொழும்பு, பெப்.21

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்த கருத்து அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்ட விடயம் அல்ல. அது அரசின் நிலைப்பாடும் அல்ல என்று அமைச்சர்கள் அறிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் விமல் வீரவன்ஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இது அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்ட விடயம் அல்ல என்று குறிப்பிட்டார்.

இதன்பின்னர் கருத்து வெளியிட்ட அமைச்சர் மனுஷ நாணயக்கார, "அமைச்சர் (ஹரின் பெர்னாண்டோ) இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் உள்ள தொடர்பை எடுத்துக் கூறி, இலங்கைக்கு சுற்றுலா வர வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். ஆனால் உரை எடிட் செய்யப்பட்டு, ஒரு பகுதி மட்டுமே வெளியிடப்பட்டதால்தான் சர்ச்சை ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார். (எ-44)

# ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க

## சியம்பலாபிட்டிய புகழாரம்

சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்டு நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பதைச் செயலில் நிரூபித்துக்காட்டிய தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் நிச்சயம் அவருக்கு ஆதரவு கிடைக்கும்.

இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கண்டியில் தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி வேட்பாளர்களாகத் திறமையான வேட்பாளர்கள் உள்ளனர். இந்த பெயர்களை எல்லாம் வரிசைப்படுத்தினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிக புள்ளிகளைப் பெறுவார்" -என்றார். (எ-இ)

# அரசியல்வாதிகளாலேயே மக்களுக்குள் பிளவு

## நஹிமியன் தேரர் கவலை

கொழும்பு, பெப்.21

வாக்குகளுக்காகக் காத்திருந்து நாட்டை அபிவிருத்தி செய்வதில் நம்பிக்கை இல்லை என மல்வத்து பிரிவின் பிரதம தலைவர் வணக்கத்துக்குரிய திப்பட்டுவே ஸ்ரீ சுமங்கல நஹிமியன் தேரர் தெரிவித்துள்ளார்.

"தேசிய ஒற்றுமையை உருவாக்க பல விடயங்களைச் செய்யும்போது, இந்த அரசியல்வாதிகள் அவற்றை அழிப்பதோடு, ஒற்றுமையையும் அழிக்கிறார்கள். நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஒழிக்கவேண்டும் என்று இவர்கள் மக்களை ஏமாற்றிக்கொண்டே இருக்கிறார்கள்" என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

# ஜிரான், தென்னக்கோனுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சதித் திட்டம்?

கொழும்பு, பெப்.21

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோருக்கு எதிரான சதித்திட்டம் தொடர்பான தகவல்கள் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்துள்ளது என்று 'சிலோன் ருடே' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளன என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'யுக்திய' நடவடிக்கை குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்களுக்குப் பெரும் அடியாக அமைந்துள்ளது. அதனால் அவர்கள் ஏதாவது செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக பெருந்தொகைப் பணத்தை வழங்கியுள்ளனர் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# சோதனைகள் சாதனைகளாகட்டும்




மீண்டும் ஒரு தவக்காலத்தில் காலடி வைத்துள்ளோம். அதற்கு அடையாளமாக நெற்றியில் சாம்லைப் பூசினோம். நம் ஆடைகளில் அலங்காரங்களில் உணவுகளில் வழிபாடுகளில் பல மாற்றங்கள். இவை எல்லாம் எதற்காக?

மழுங்கிய எம் மனங்களை மறுபடியும் கூர்மையாக்க குறுகிப்போன எம் பார்வைகளைச் சீர்ப்படுத்த அழுக்கேறிய சடங்குகளை அர்த்தப்படுத்த இறுகி முறுக்கேறிய எம் இதய நரம்புகளைத் தளர்த்தி பிரிவின் சுரங்களாக்க இவற்றுக்கு எதிராக வரும் சோதனைகளை வெற்றிகொள்ள இயேசு பாலை நிலத்தில் எவ்வாறு சோதனைகளை வென்றாரோ அதைப்போல நாமும் வெல்ல அழைக்கப்படுகின்றோம்.

சோதனைகளை இறைவார்த்தையின் வல்லமையால் செபவாழ்வால் இறை உறவால் இயேசு வென்றார்.

நாமும் பல சோதனைகளை நாளாந்தம் சந்திக்கின்றோம். அதிகார, ஆணவ, ஆசைகள், பணம், பொருள் , சிற்றின்ப போதைப் பாவனை, ஏமாற்றிப் பிழைக்கும் தறிகெட்ட ஆசைகள் எம்மை ஆட்டிப்படைக்கின்றன. செப தவ இறை உறவில் நிலைத்து நின்று சோதனைகளை வென்றிடுவோம்.

**எஸ்.யேசுதாஸ்**, கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழக மீனவர்கள் நடத்தும் போராட்டம் அர்த்தமற்றது!

வடமராட்சி வடக்கு க.தொ.கூ.ச. சமாசம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.21

**இலங்கை நீதிமன்றத்தால் நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டவர் மீண்டும் எல்லைதாண்டி மீன்பிடித்தமைக்காகவே இந்திய மீனவர்கள் மூவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதற்காக தமிழகத்தில் கறுப்புக்கொடிப் போராட்டம் நடத்துவதிலோ, கச்சதீவு திருவிழாவைப் புறக்கணிப்பதிலோ எந்த அர்த்தமும் இல்லை.**

-இவ்வாறு வடமராட்சி வடக்கு க.தொ.கூ.ச. சமாசங்களின் உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- நீதிமன்றத்தால் நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டவர் மீண்டும் எல்லைதாண்டி மீன்பிடித்தமையால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜி.பி.எஸ். கருவி இருந்தும் எல்லைதாண்டிய இரு படகோட்டிகளுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய இந்திய மீனவர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதற்குத் தமிழக மீனவர்கள் போராட்டம் நடத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை. கச்சதீவு ஓர் ஆலயம், அதற்கும் மீனவர்கள் பிரச்சினைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை - என்றார். (ஏ-100)

## மாணவி கொலை

### கறுப்புப் பட்டி அணிந்து அலுவலர்கள் எதிர்ப்பு

மன்னார், பெப்.21

தலைமன்னார், ஊர்மனைக் கிராமத்தில் பாடசாலை மாணவியான 10 வயதுச்சிறுமி வன்புணர்வுக் குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலர், பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட அங்கு பணிபுரியும் அனைவரும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கறுப்புப் பட்டி அணிந்து பணிக்கு வந்திருந்தனர். (ஏ-60)



## முற்றவெளி வானில் இந்திய -இலங்கை

# விமான சாகசம்

கொழும்பு, பெப்.21



இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் இலங்கை - இந்திய விமானப் படை சாகச நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

"நட்பின் சிறகுகள்" என்ற தொனிப்பொருளில் வடக்கு மாகாணத்தை முன்னிலைப்படுத்தி விமானப்படை சமூக சேவை அமைப்பின் ஊடாகப் பல்வேறு சமூகப் பணித் திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் "Air Tattoo 2024" தொழில்நுட்பக் கல்விக் கண்காட்சி மற்றும் திருவிழா நிகழ்வுகள் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் மார்ச் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

"பரசூட் சாகசங்கள், இலங்கை விமானப்படையின் விமான சாகசங்கள் , விமானக் கண்காட்சிகள், விமானப்படை மோப்ப நாய்களின் சாகச நிகழ்வுகள், பொழுதுபோக்கு நிகழ்வுகள் ,ட்ரோன் விமானங்களின் நிகழ்வுகள் விளையாட்டுத் தொகுதிகள், தற்காப்புக்கலை ,அடிமுறை சண்டைக் காட்சிகள், இந்திய விமானப் படையின் ஹெலிகொப்டர் சாகச நிகழ்வுகள் அடங்கலாக கலாசார நிகழ்வுகளும் இரவு நேர இசைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன." என்று விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச தெரிவித்தார். (ஏ-இ)

## விசுவமடுவில் களவு பிரமந்தனாறில் மீட்பு

முல்லைத்தீவு, பெப். 21

விசுவமடுவில் களவாடப்பட்ட மோட்டார் சைக்கிளொன்று பிரமந்தனாற்றுப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, விசுவமடு- தொட்டியடிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாட்டு வண்டிச்சவாரியை பார்க்கச் சென்ற ஒருவரின் மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டது என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பிரமந்தனாற்று பகுதியிலுள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த மோட்டார் சைக்கினை மீட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களை சட்டநடவடிக்கைக்குட்படுத்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-19)

## பெண் மீது வாள்வெட்டு


யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாணம், கோப்பாய் மத்திப் பகுதியில் பெண்ணொருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு நடந்துள்ளது. காயமடைந்த பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நீண்டகாலமாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் கோப்பாய்ப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஏ-26-20-66)

## பசுமாடு திருட்டு

பளை, இந்திராபுரத்தில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட பசுமாடு இனந்தெரியாதோரால் கடந்த சனிக்கிழமை களவாடப்பட்டுள்ளது.

காலபோக நெற்செய்கை அறுவடை முடியும் வரை கட்டிவளர்த்து, பின்னர் மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடப்பட்ட பசுமாடு கடந்த இரு தினங்களாகத் தேடியும் கிடைக்கவில்லை என அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)



# தினம் தெரியுமோ?

கிளிநொச்சியில அரசாங்க அதிபரா இருந்தவா போனகிழமையே அறுபது வயது வந்து, பென்சன் எடுத்திட்டா. அவான்ர மணிவிழாவுக்கு ஒரு சிறுவர் இல்லம் காசுமெத்திப்போய் சாப்பாட்டுச் செலவுக்கு ஸ்பொன்ஸர் பண்ணினதையும் பட்சி முதல் சொல்லியிருந்தது. பென்சனிலபோயும் அவா இன்னும் அரசாங்கத்தின்ர வாகனத்தையோ, குவார்ட்டஸையோ குடுக்கேலை. இத்தனைக்கும் அவான்ர சொந்த இடம் கிளிநொச்சிதான். அப்ப அவாக்கு என்னத்துக்கு குவார்ட்டஸ்? அரசாங்க அதிகாரிமார் ஆத்திர அவசரத்துக்கு தங்கட சொந்த விசயத்துக்கு வாகனத்தை ஓடினாலே 'ஓடிட்'காரர் ஓடியந்திடுவினம். ஆனால் ஒரு அரசாங்க அதிபரா இருந்தவா, பென்சனில போனால் தன்ர வாகனத்தை முறைப்படி ஒப்படைச்சிருக்கவேணும். ஆனால் ஒப்படைக்கேலை. குவார்ட்டஸை விட்டு தன்ர வீட்டை போயிருக்க வேணும். ஆனால் இன்னும் போகேலை. ரூல்ஸ் எல்லாம் நல்லாத் தெரிஞ்சும் அவா போகாமல் இருந்ததுக்கு ஒரு காரணம் இருக்கு. எல்லாமே வீணைவாசிக்கிற அமைச்சரின்ர 'சப்போர்ட்' இருக்கென்ட தைரியம்தான்.

கிளிநொச்சியில அமைச்சர் என்ன சொல்லுறாரோ அதைத்தான் அம்மணி இவ்வளவுகாலமும் செய்து கொண்டு வந்தவா. அதால மற்ற அரசியல்வாதிமாரை அவா எள்ளளவும் மதிக்கிறதேயில்லை. இந்தமுறை கூட எம்.பி.மாருக்குக் குடுக்கிற பன்முகப்படுத்தப்பட்ட நிதி யொதுக்கீட்டுக்குப் பதிலா, கச்சேரி மூலமாத்தான் நிதியொதுக்கீடு நடந்தது. வீணைக்கட்சிக்காரரும், கிளிநொச்சி அரசாங்க அதிபரும் மற்றக் கட்சியளுக்கு இதைப்பற்றி ஒன்டும் சொல்லாமல் தாங்கள் நினைச்சபடி, தங்கட ஆக்களுக்குத்தான் இந்த ஒதுக்கீடுகளைச் செய்தவையாம். ஏற்கனவே தங்கட கட்சியை விட்டிட்டுப் போய், கிளிநொச்சியில ஊரளவுக்கு காலூண்டியிருக்கிற சந்திரமான வரால் வீணையின்ர சத்தம் கிளிநொச்சியில அடங்கிக் கிடந்தது. ஆனாலும் இப்ப அமைச்சர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரா வந்தபிறகு, அரசாங்க அதிபரின்ர துணையோட திரும்பவும் ஊரளவுக்கு வீணைக்கச்சேரியளை வைக்க வெளிக்கிட்டவை. இப்பிடி எல்லாம் கூடிவரேக்க, அவாக்கு அறுபது வயதாகி பென்சனில போகவேண்டி வந்திட்டுது. அவா போனால் இனி தன்ர பருப்பு கிளிநொச்சித் தண்ணியில பெரிசா வேகாதெண்டு வீணைக்காரருக்கு தெரியும். அதால அவாவுக்கு இன்னும் ஒருவருசம் கூடுதலாப் பதவியில இருக்க ஒரு விசேட அமைச்சரவைப் பத்திரம் கொண்டந்திடலாம் எண்டு நம்பிக்கை குடுத்திருக்கிறார். அதை நம்பித்தான் அவா இன்னும் வாகனத்தையும், குவார்ட்டஸையும் குடுக்காமல் வைச்சிருந்திருக்கிறா.

தனிய கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு மட்டும் அமைச்சரவைப் பத்திரம் கொண்டந்தால், தன்ர தில்லாலங்கடி வேலை வெளிப்பட்டிடும் எண்டது அமைச்சருக்குத் தெரியும். அதால கிளிநொச்சிக்கு இறைச்ச நீர் யாழ்ப்பாணத்துக்கும் பொசியிற மாதிரி யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் சேர்த்து ஒருவருசம் பதவிநீடிப்புச் செய்யச் சொல்லித்தான் அமைச்சரவைப் பத்திரத்தை முந்தநாள் முன்வைச்சவர். தன்ர சொல்லை அமைச்சரவை தட்டாது எண்டது அமைச்சரின்ர எண்ணம். ஆனால் ரணிலின்ர எலக்சன் கணக்கில இப்பிடி பதவி நீடிப்புக் குடுத்தால் எல்லாம் பிசகிடும், அதால ஒருத்தருக்கும் பதவி நீடிப்பு இல்லையெண்டு அமைச்சரவையைக் கொண்டு முகத்தில அடிச்சமாதிரி சொல்லவைச்சிட்டார் ரணில். இதை வீணைக்கார அமைச்சரும் எதிர்பார்க்கேலை, கிளிநொச்சி அம்மணியும் எதிர்பாக்கேலையாம். இப்ப வாகனம் ஏன் குடுக்கேலை, குவார்ட்டஸை ஏன் விடேலை எண்டதுக்கு என்ன விளக்கம் குடுக்கலாம் எண்டு அவா யோசிச்சுக் கொண்டு இருக்கிறாவாம்.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.21

மத்திய அரசின் கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலக மண்டபத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார அதிகாரசபையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

தலைவராக திருமதி உஷா சுபலிங்கம், உபதலைவராக மார்க்கண்டு, செயலாளராக திருமதி விஜிதா ஆரியரட்ண, பொருளாளராக தி. சசிகரன் மற்றும் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தலா ஒரு கலைஞர் வீதம் தெரிவு செய்யப்பட்டனர். (ப-9,131)

## மின்சாரம் தாக்கி இளைஞன் சாவு

கொழும்பு, பெப். 21

22 வயதுடைய இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.


இந்தச் சம்பவம் கொட்டாவை - ருக்மல்கம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

குறித்த இளைஞர் வீட்டிலுள்ள மின்விசிறியை சரி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போதே மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# யாழ். பொலிஸ் பிராந்தியத்தில் 73 கடும் குற்ற முறைப்பாடுகள்

**யாழ்ப்பாணம், பெப்.21**

**யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்தில் கடந்த டிசெம்பர் மாதம் 25ஆம் திகதிமுதல் தற்போதுவரையில் கடுமையான குற்றங்கள் தொடர்பாக 73 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.**



யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

73 முறைப்பாடுகளில் 63 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. கொள்ளைச் சம்பவம் தொடர்பாக 15 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், அவற்றில் 10 முறைப்பாடுகள் தொடர்பாகத் தீர்வு காணப்பட்டுள்ளது. வீடு உடைத்துத் திருடப்பட்டமை தொடர்பாக 12 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், அவற்றில் 9 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

களவு தொடர்பாக 15 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டநிலையில், அவற்றில் 11 முறைப்பாடுகள் தொடர்பாகத் தீர்வு காணப்பட்டுள்ளது.

கடமைக்கு இடையூறு விளைவித்தல் தொடர்பாக ஒரு முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில், அதற்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

போதைப்பொருள் தொடர்பாக 5 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டநிலையில், அவற்றில் 4 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டது. 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளுடன் தொடர்புடைய 4 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டநிலையில், அவற்றில் 3 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. தீயிட்டமை தொடர்பாக 5 முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தநிலையில், அவற்றில் 4 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல் தொடர்பாக இரு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டநிலையில், அவற்றுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. ஆள்கடத்தல் தொடர்பாக இரு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டநிலையில், அவற்றுக்குத் தீர்வு காணப்பட்டது. கடும் காயம் விளைவித்தல் தொடர்பாக 6 முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தநிலையில், அவற்றுக்குத் தீர்வு காணப்பட்டது.

கூரிய ஆயுதத்தால் காயம் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பாக 9 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளநிலையில் அவற்றுக்குத் தீர்வு காணப்பட்டது. நம்பிக்கை மோசடி தொடர்பாக 2 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், அவற்றுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (எ-125)

## தேடப்பட்டுவந்த 531 பேர் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணம், பெப்.21

நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 531 பேர், கடந்த ஒரு மாத காலப் பகுதியில் யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன் போதே இந்தத் தகவல் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, சாதாரண பிடியாணை பிறப்பிக்கப்பட 230 பேரும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 301 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-26)

# வலுவூட்டல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ். மாவட்டத்தில் 'அஸ்வெசும' நலன்புரி உதவித்திட்டத்தில் இணைந்துள்ள 72 ஆயிரத்து 60 குடும்பங்களிலிருந்து பிரதேச ரீதியாகப் பொருண்மியம் நலிவுற்ற 11 ஆயிரத்து 948 குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களை வலுவூட்டல்செயற்றிட்டத்தில் இணைக்க சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

நெடுந்தீவில் 100 குடும்பங்களும், ஊர்காவற்றுறையில் 292 குடும்பங்களும், வேலணையில் 404 குடும்பங்களும், யாழ்ப்பாணத்தில் 801 குடும்பங்களும், காரைநகரில் 360 குடும்பங்களும், நல்லூரில் 750 குடும்பங்களும், தென்மராட்சியில் ஆயிரத்து 157 குடும்பங்களும், மருதங்கேணியில் 277 குடும்பங்களும், பருத்தித்துறையில் 904 குடும்பங்களும், கரவெட்டியில் 857 குடும்பங்களும், வலி. கிழக்கில் ஆயிரத்து 581 குடும்பங்களும், தெல்லிப்பழையில் ஆயிரத்து 27 குடும்பங்களும், உடுவிலில் ஆயிரத்து 130 குடும்பங்களும், சண்டிலிப்பாயில் ஆயிரத்து 191 குடும்பங்களும், சங்கானையில் ஆயிரத்து 115 குடும்பங்களும் தெரிவு செய்யப்படவுள்ளன என்று மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ப-9)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். மகிழ்ச்சியான நாள். திடீர்ச் செலவுகளும் ஏற்படும். முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் கூடுதலாகும்.

**இடபம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமற்போன முக்கியமான ஆவணம் ஒன்று கிடைக்கும். புது யுக்திகளை கையாள்வீர்கள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்** : குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்று கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விசார் முரண்பாடுகள் ; தீர்வில்லாவிடின் போராட்டம்

## அதிபர், ஆசிரிய சங்கம் எச்சரிக்கை

சம்பள முரண்பாட்டைக் களைய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

"ஆசிரியர், அதிபர் பதவி உயர்வுகள் தொடர்பாக எந்த வேலைத்திட்டமும் இல்லை. ஒட்டுமொத்த கல்விமுறை பிரச்சினைகள் குறித்து கல்வி அதிகாரிகள் கவனம் செலுத்துவது இல்லை. தினமும் கலந்துரையாடல்கள் மட்டுமே இடம்பெறுகின்றன. எனவே, ஆசிரியர் பிரச்சினைகளுக்குக் காத்திரமான தீர்வு கிடைக்கப்பட வேண்டும். இல்லாவிடின் எதிர்காலத்தில் பல்வேறு தொழில்சார் நடவடிக்கைகளில் குதிப்போம்" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)




# பாலம் அமைப்பதற்கு முன்னர் மீனவர் சிக்கலைத் தீருங்கள்!

## வடக்கு கடற்றொழில் இணையம் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், பெப்.21**

**இந்தியாவுக்கும், இலங்கைக்கும் பாலம் அமைப்பதற்கு முன்னர் இந்திய அரசாங்கம் இழுவைமடிப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று வடக்கு மாகாண கடற்றொழில் இணையத்தின் செயலாளர் மொஹமட் ஆலம் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்திய மீனவர்களின் அத்துமீறல் மிகப்பாரதூரமாக உள்ளது. அண்மையில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மன்னாருக்கு வந்திருந்த போது இந்தவிடயம் தொடர்பாக அவரிடம் சுட்டிக்காட்டியிருந்தோம். இந்தியா, இலங்கை இடையிலான பாலம் அமைப்பது தொடர்பில் அதன் நன்மைகளைக் கருத்தில் கொள்ளாது எதற்காக எதிர்க்கிறீர்கள் என்று எம்மிடம் கேட்கப்பட்டது. இந்தியா - இலங்கை இடையிலான பாலம் அமைப்பதற்கும், இருநாட்டு உறவுகளைப் பலப்படுத்துவதற்கும் நாங்கள் எதிர்ப்பில்லை.

ஆனால் அத்துமீறி இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவது நீண்ட காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை. அதை விடுத்து பாதை அமைத்தோ, நலத்திட்டங்களை முன்னெடுத்தோ எந்தப் பிரயோசனமும் இல்லை - என்றார். (எ-125)

# யாழ். பல்கலைக்கழக நுண்கலை மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், பெப்.21

விரிவுரைகளை துரிதப்படுத்தக்கோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீட மாணவர்கள் நேற்று வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீட இசைத்துறையில் 4ஆம் வருடத்தில் கல்விகற்க வேண்டிய 3ஆம் வருட, 2ஆம் அரையாண்டு மாணவர்களின் விரிவுரைச் செயற்பாடுகளை துரிதப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியே வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாணவர்கள் வாயிற்கதவுகளை மூடிப் போராட்டத்தை முன்னெடுத்தமையால் விரிவுரையாளர்கள், பணியாளர்கள் உட்செல்லமுடியாமல் தடுக்கப்பட்டனர். (எ-26,20,66)

# 'ஜம்போறி' மாநாட்டுக்கு 75 முல்லைச் சாரணர்கள்

முல்லைத்தீவு, பெப். 21

இலங்கை சாரணர் சங்கத்தின் 10 ஆவது ஜம்போறி மாநாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 75 சாரணர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கை சாரணர் சங்கத்தின் 10 ஆவது ஜம்போறி மாநாடு திருகோணமலையில் இன்று 21ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பாடசாலைகளை பிரதிநிதித்துவப் படுத்தி 75 சாரணர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜம்போறியில் பங்கேற்கும் முல்லைத்தீவு சாரணர்களுக்கான ஒருநாள் பயிற்சிப் பாசறை முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ச-19)

# கடந்த ஆண்டு 8,291 பிறப்புகள்

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தில் கடந்த ஆண்டு 8 ஆயிரத்து 291 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட இறப்புகள் 5 ஆயிரத்து 805 ஆகப் பதிவாகியுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கமைய இந்தத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. (எ-125)

# தட்டாங்குளம் பிள்ளையார் வீதியை சீரமைக்குமாறு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், பெப்.21

கொடிகாமம், தட்டாங்குளம் பிள்ளையார் வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

சுமார் 18 வருடங்களாகக் குண்டும், குழியுமாகக் காணப்படுகின்ற இந்த வீதி மழைகாலங்களில் வெள்ளத்தில் மூழ்குவதால் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இந்தக் கிராம மக்கள் வடமாகாண ஆளுநரிடம் வீதியைப் புனரமைப்புச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தநிலையில், சுமார் 2.34 கிலோமீற்றர் வீதியைப் புனரமைப்புச் செய்வது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அறிவுறுத்தினார்.

வீதியை முழுமையாகப் புனரமைக்க 42 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது. இதில் 10 மில்லியன் ரூபா நிதி சாவகச்சேரி பிரதேசசபை யால் ஒதுக்கப்பட்டுள்ளது. முழுமையான நிதி கிடைக்காத பட்சத்தில் சாவகச்சேரி பிரதேசசபையால் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இந்த வீதி, பகுதி அளவில் புனரமைக்கப்படும் என வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். பிரணவநாதன் கூறியுள்ளார். (ப-26)

# குரங்குகளை கட்டுப்படுத்துக

கிளிநொச்சி, அக்கராயன் பிரதேசத்தில் குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, அக்கராயன் குளத்தின் கீழ் பெருமளவிலான பயிர்ச் செய்கைகளை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். குரங்குகளால் பெருமளவு பயிரழிவுகளை எதிர்நோக்க நேரிடுகிறது என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப-13)

# வடக்கு மாகாண ஆளுநருடன் கட்டளைத் தளபதிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம் மாவட்ட பாதுகாப்புப் படைத் தலைமையக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க மற்றும் கடற்படையின் வடபிராந்தியக் கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் காஞ்சன பானகொட ஆகியோர் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்புகள் நேற்றுமுன்தினம் வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நடந்துள்ளன.

கட்டளைத்தளபதியுடனான சந்திப்பில், யாழ். பிராந்தியத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை உரிய முறையில் முன்னெடுத்தல், பொதுமக்களின் நாளாந்த வாழ்வியல் செயற்பாடுகளின்போது தேவையான பாதுகாப்பைப் பெற்றுக்கொடுத்தல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. வடக்கு ஆளுநரைச் சந்தித்த வடபிராந்திய கடற்படையின் வடபிராந்தியக் கட்டளைத் தளபதியிடம், வடக்கு சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பாக வடக்கு ஆளுநர் கோரிக்கை விடுத்தார். இந்த விடயங்களில் பூரண ஒத்துழைப்பை வழங்க வடபிராந்திய கட்டளைத் தளபதி உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னைகளில் பீடை நோய் கட்டுப்படுத்தாவிடின் பாதிப்பு

## மன்னார் விவசாயப் பணிப்பாளர் அறிவுறுத்து



மன்னார், பெப். 21

**வரட்சியான காலநிலை தற்போது ஆரம்பமாகியுள்ள நிலையில் தென்னை மரங்களில் ஒரு வித பீடை நோய் தொற்ற ஆரம்பித்துள்ளது. இந்தத் தாக்கம் தொடர்பில் செய்கையாளர்கள் அவதான மாக இருக்க வேண்டும் என்று மன்னார் விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சகிலா பானு அறிவுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

தற்பொழுது நிலவி வருகின்ற வரட்சியான காலநிலையால் தென்னைகளில் ஒருவிதமான பீடை நோய் தொற்றத் தொடங்கியுள்ளது. இது தென்னை ஓலையின் கீழ்ப் பகுதியில் பஞ்சு போன்ற பதார்த்தம் காணப்படும்.

இந்த நோய் ஏற்படும் பட்சத்தில் தென்னை ஓலைகளில் பச்சையம் உறிஞ்சப்பட்டு ஒளித்தொகுப்பு ஏற்பட முடியாத நிலை தோற்றுவிக்கப்படும். இந்தத் தாக்கத்திலிருந்து சுரக்கப்படும் திரவத்திலிருந்து இரண்டாவது தொற்றாக கறுப்பு நிற பங்கசுகள் உருவாகும்.

இதனால் தென்னைகளின் உற்பத்தித் திறன் குறைவடைந்து செல்லும். இந்த நோய் சுமார் ஐந்து முதல் ஆறு மாதங்கள் வரை தொடரும் நிலை காணப்படுகின்றது.

இந்தப்பீடையானது தென்னை மரத்துக்கு மாத்திரம் அல்லாமல் மாறாக தென்னை மரத்துக்கு அருகிலுள்ள அனைத்து பயிர் இனங்களிலும் பாதிப்பை உண்டாக்கும். ஒரு பூச்சி ஒரு வாரத்துக்குள் நூறு முட்டைகளை ஈன்று விடும்.

இவ்வாறான தாக்கம் தென்னைகளில் காணும் பட்சத்தில் இதற்கு மருந்து அடிக்கவேண்டிய அவசியமில்லை. வெறும் தண்ணீரை ஸ்பிரே மூலம் அதிவேகத்தில் தென்னை ஓலைகளுக்கு அடிக்கவேண்டும். அதனால் ஓலைகள் கழுவப்பட்டு விடும்.

தண்ணீரால் ஓலைகளைக் கழுவுவதற்கு வாய்ப்பில்லாவிடின் மரத்துக்குக் கீழே வேப்பம் விதை அல்லது குப்பைகளை போட்டு நெருப்பை எரிக்காது புகையூட்ட வேண்டும். அதனூடாகவும் இந்தத்தாக்கத்தை இல்லாதொழிக்கலாம்.

ஆகவே இந்த நோய்ப்பீடை அவதானிக்கப்படின் மாவட்ட விவசாய அலுவலகத்திலோ அல்லது விவசாயப் போதனாசிரியர்களைத் தொடர்புகொண்டோ நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-60)



## கில்மிஷாவுக்கு 'கான வாணி' விருது

யாழ்ப்பாணம், பெப்.21

இந்தியத் தொலைக்காட்சி நடத்திய பாடல் போட்டியில் வெற்றிபெற்ற கில்மிஷாவைக் கௌரவிக்கும் நிகழ்வு, வட அல்வை இளங்கோ சனசமூக நிலைய மைதானத்திலுள்ள வேலுப்பிள்ளை கனகம்மா அரங்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வட அல்வை இளங்கோ சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர். (ப-100-27)



வரலாற்றுச் சிறப்புமிக்க மாசிமக இலட்சார்ச்சனை உற்சவம் தெல்லிப்பழை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் கடந்த திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ப-27)

## ஓட்டோவை மறித்து சரமாரித் தாக்குதல்

### யாழில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ். நகரிலிருந்து ஆவரங்கால் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஓட்டோ மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் இராசவீதி, மாசுவன் சந்திக்கு அருகில் நடந்துள்ளது.

சாரதி கூக்குரலிட்டதையடுத்து தாக்குதல் நடத்தியோர் தப்பிச் சென்றனர் என்றும் ஓட்டோவின் கண்ணாடிகள் தாக்குதலில் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## நாட்டில் 20,000 ஆசிரிய வெற்றிடங்கள்

கொழும்பு, பெப். 21

நாட்டில் தற்போது 20 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடம் காணப்படுகிறது. இதனால் மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஆட்சேர்ப்பை நிறுத்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் 10 மாத கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர் சேவையை விட்டுச் சென்ற மற்றும் வெளிநாடு சென்ற ஆசிரியர்கள் காரணமாக மாகாண மட்டத்தில் 13 ஆயிரத்து 500 வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புக் கிடைத்தால், விரைவில் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)



## ரூ.7 மில்லியன் செலவில் புதுக்குடியிருப்பில் முதியோர் இல்லங்கள்

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் 7 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்பில் புதுக்குடியிருப்பில் இரண்டு முதியோர் இல்லங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

உடையார்கட்டு வடக்கு கிராமத்திலும் புதுக்குடியிருப்பு மேற்கு கிராமத்திலும் இந்த முதியோர் இல்லங்கள் அமைக்கப்பட்டு முதியோர் சங்கத்திடம் கையளிக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு மேற்கு முதியோர் சங்கத் தலைவர் வெ. கணேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளர் சி. ஜெயக்காந்த், உதவி பிரதேச செயலாளர் ம. சர்மிலி, பிரதேச செயலக கணக்காளர் கடம்பசோதி மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர். (ச-19)

## முதலாம்தர மாணவர் உள்ளீர்ப்பில் வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், பெப். 21

நாட்டில் பிறப்பு வீதம் குறைவடைந்ததன் காரணமாக பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்க்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை மூன்று இலட்சமாகக் குறைந்துள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டில், 3 இலட்சத்து 45ஆயிரம் மாணவர்கள் பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்க்கப்பட்டனர், 2018 இல் அந்த எண்ணிக்கை 3 இலட்சத்து 28 ஆயிரமாகக் குறைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டளவில் முதலாம் தரத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை மூன்று இலட்சமாகச் சரிந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புதிய பொலிஸ் நிலையங்கள்

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலதிகமாக இரு பொலிஸ் நிலையங்களை அமைப்பதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்கள் வெவ்வேறு பிரதேச செயலகங்களாகக் காணப்படுகின்ற போதும், மூன்று பிரதேசங்களுக்கும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையமே தலைமைப் பொலிஸ் நிலையமாக இயங்குகின்றது. ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தின் காவலரண்கள் காரைநகர் களபூமி, மண்டைதீவு, குறிகாட்டுவான், நயினாதீவு ஆகிய பகுதிகளில் உள்ளன. குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், புவியியல் ரீதியான பிரச்சினைகளை நிவர்த்திசெய்யவும் பொலிஸ் நிலையங்கள் தேவை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (எ-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# என்ன வளம் இல்லை?

கடலிலே காவியம் படைத்தவர்கள் தமிழர்கள். ஆழக்கடலெங்கும் சோழ மகராஜன் ஆட்சி புரிந்த காலத்தில் இருந்து 2009 க்கு முன்னரான கடற் புலிகளின் காலம் வரை புதிய வரலாறுகளை கடலிலே தமிழர்கள் படைக்கத்தவறவில்லை. கடற்போர்களில் மாத்திரமல்லாது கடற்கலன்களை வடிவமைப்பதிலும் தமிழர்களுக்கென்று தனித்துவமான நுட்பமும், தேர்ச்சியும் கைவரப்பெற்றிருந்தன. தமிழர்களின் கப்பல்கட்டும் கலைக்கு மிகச் சிறந்த உதாரணம் 'அன்னபூரணி' என்ற மரக்கலம். யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையில் 1930 ஆம் ஆண்டு இலுப்பை மரத்தால் ஆக்கப்பட்ட இந்தக் கப்பலை நாகப்ப செட்டியார் என்பவர் வைத்திருந்தார். அந்தக் கப்பலின் அழகிலும், தரத்திலும் மயங்கிய வில்லியம் றொபின்சன் என்ற அமெரிக்கர், எப்படியேனும் அன்னபூரணியைத் தனக்குச் சொந்தமாக்க எண்ணினார். கடைசியில் 20 ஆயிரம் ரூபாவுக்கு அன்னபூரணியை வாங்கிய றொபின்சன், தமிழ் மாலுமிகளிடம் அதனை வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்காவுக்கு கொண்டுவரும் பணியை ஒப்படைத்தார். 90 அடி நீளமான இந்தப் பாய்மரக்கப்பல் 1936 இல் அமெரிக்காவைச் சென்றடைந்தது.

தமிழர்களின் கடற்கலன்களின் கதை பாய்மரக்கப்பல்களோடு முற்றுப்பெற்றுவிடவில்லை. ஈழத்தமிழர்களின் உரிமைப்போராட்டம் தீவிரம் பெற்றபோது, விடுதலைப்புலிகள் தரையைப் போலவே கடலிலும் தங்கள் பலத்தை நிரூபிப்பதில் முனைப்போடு இருந்தனர். புதிய வகையிலான 'குருவி' என்ற அதிவேகப் படகுகள் முதல், நீர்மூழ்கிக்கலங்கள், ராடர்களிலேயே சிக்காத படகுகள் என்று கடற்புலிகளின் புதிய கண்டுபிடிப்புகள் போரியல் வல்லுநர்களை இன்னமும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியபடியேயுள்ளன. இலங்கைக் கடற்படையிடம் கூட அத்தகைய நவீன, ராடர்களின் கண்ணிலேயே மண்ணைத்தூவும் கடற்கலங்கள் இல்லை. புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்த பின்னரும்கூட, அவர்களின் கடற்கலன் கட்டுமானங்கள் பற்றிய மர்மங்கள் இன்னும் துலங்காமலே உள்ளன. இப்படி மிக நீண்ட, தனித்துவமான கப்பல்கட்டும் கலை எம்மிடம் மிக அண்மைக்காலம் வரை நிலவியே வந்தது. இந்த வரலாற்றின் நீட்சியாக, காரைநகர் சீ-நோர் கப்பல் கட்டும் தளத்தில் தயாரிக்கப்பட்ட சொகுசுக் கப்பலின் வெள்ளோட்டத்தைப் பார்க்க முடியும். கடந்த இருநாள்களாக ஊடகங்களிலும், சமூகவலைத்தளங்களிலும் இந்தச் சொகுசுக் கப்பல் பேசுபொருளாகி வருகின்றது.

'குண்டூசியைக் கூட இறக்குமதி செய்யும் நாடு' என்று இலங்கையின் பொருளாதார முறையைப் பலரும் கிண்டலடிப்பதுண்டு. இறக்குமதிப் பொருளாதாரத்தை மட்டுமே ஒருநாடு நம்பியிருந்தால், வெகுவிரைவிலேயே அது தாழ்வுற்று, வறுமை விஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு பாழ்பாட்டே போய்விடும். இலங்கையும் இதே போக்கில்தான் சென்றுகொண்டிருக்கிறது. ஆனால் 'என்ன வளம் இல்லை எங்கள் திருநாட்டில்..?' என்பதைப் போல, உற்பத்திகளுக்குத் தேவையான இயற்கைவளமும், மூளைவளமும், ஆளணியும் இலங்கையில் தாராளமாகவே கொட்டிக்கிடக்கின்றன. ஆனால் அவற்றை அப்படியே மூலப்பொருளாகவும், தொழிலாளர் படையாகவும் வெளிநாடுகளுக்கு அள்ளிக்கொடுத்துவிட்டு, இங்கு எதுவுமே இல்லையென்று புலம்பிக்கொண்டிருப்பதே இலங்கையில் வாடிக்கையாகப் போய்விட்டது. ஆனால் அதையும் மீறி நம்மாலும் சர்வதேசத்தரத்துக்கு நிகரான கப்பல்களைக் கூட கட்டமுடியும் என்று காரைநகர் சீ-நோர் தொழிற்சாலை போன்றவை நிரூபித்தே வருகின்றன. இத்தகைய முயற்சிகளை ஊக்குவித்து, உற்பத்திப் பொருளாதாரத்தைப் பெருக்கினால் உண்மையாகவே இலங்கையும் சிங்கப்பூராக மாறலாம்.



# நிகழ்நிலைக் காப்புச்சட்டம் கருத்துரிமைக்கு முரண்!



அமெ. துணைச் செயலர் தெரிவிப்பு

**கொழும்பு, பெப். 21**

**ஜனநாயக, அமைதியான, நீதியான சமூகத்தை ஸ்தாபிப்பதில் இலங்கை ஊடகவியலாளர்களின் பங்களிப்பு அவசியமாகும். இலங்கையின் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக அமையக்கூடாது.**

- இவ்வாறு இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் துணைச் செயலாளர் எலிசபெத் எம். ஆலன், கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் நிகழ்நிலை பாதுகாப்புச்சட்டம் குறித்து அமெரிக்கா கவலை கொள்கிறது. புதிய சட்டம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சுதந்திரமான கருத்துரிமைக்கு தடையாக இருக்கக்கூடாது. அமெரிக்கா கருத்துச் சுதந்திரத்துக்காக உறுதியாக நிற்கிறது - என்றார். (ச-இ)

# சுகாதார சேவைக்கு ஜப்பான் டீசல்!

இலங்கை முழுவதும் சுகாதார சேவை தங்கு தடையின்றி நடைபெறுவதற்காக ஜப்பான் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்த டீசலை கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பு துறைமுகத்திலுள்ள டொல்பின் இறங்குதுறையில் இடம்பெற்றுள்ளது.

நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி அடேக்கி, சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-6)

## புதிய நெடுஞ்சாலை கொழும்பில் திறப்பு

கொழும்பு, பெப். 21

கொழும்பு துறைமுகத்தையும் கொழும்புத் துறைமுக நகரத்தையும் நேரடியாக கொழும்பு விமானநிலையத்துடன் இணைக்கும் புதிய நெடுஞ்சாலை எதிர்வரும் ஒக்ரோபரில் திறக்கப்படவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. (ச-இ)

## 236 தாதியர்கள் இஸ்ரேலுக்கு

கொழும்பு, பெப். 21

இந்த ஆண்டு 236 இலங்கையர்கள் தாதியர் சேவைக்காக இஸ்ரேல் சென்றுள்ளனர்.

அதேவேளை, இஸ்ரேலில் தொழில்வாய்ப்பைப் பெற்ற 154 பேருக்கு தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் நேற்றுமுன்தினம் விமானப் பயணச் சீட்டுகள் வழங்கப்பட்டன. அவர்களில் 54 பேர் தாதியர் சேவையிலும், 95 பேர் விவசாயத்துறையிலும் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# திருகோணமலையில் கடற்படைக் கல்லூரி!

கொழும்பு, பெப். 21

திருகோணமலையில் இலங்கைக் கடற்படையும் பிரெஞ்சு கடற்படையும் இணைந்து கடற்படை பயிற்சிக்கல்லூரியொன்றை ஆரம்பிக்கவுள்ளன. அதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது. ஆசிய பசுபிக் பிராந்திய பிரெஞ்சு தூதுவர் மார்க் அபென்சோர் நேற்றைய தினம் கடற்படைத்தளபதி பிரியந்த பெரேராவை சந்தித்து இந்தப் பயிற்சிக்கல்லூரி தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

சேர். ஜோன். கொத்தலாவலை இராணுவப் பல்கலைக்கழகத்தின் கீழேயே இந்தப் பயிற்சிக்கல்லூரி இயங்கவுள்ளது. பிராந்தியத்திலுள்ள மாணவர்களை பயிற்சிக்கு இணைத்துக் கொள்வது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. (எ-6)

## நாளை

22.02.2024

**வியாழக்கிழமை**

**மாசி-10**

சுபநேரம் : 08.01 - 09.31

ராகுகாலம் : 02.01 - 03.31

## நாளொரு நல்வார்த்தை

போட்டியும், பொறாமையும், பொய்ச் சிரிப்பும் நிறைந்த இவ்வுலகில், நமது பாதையில் நாம் நேராக நடந்துசெல்ல நமக்குத் துணையாக இருப்பது கல்வி மட்டுமே.

– அறிஞர் அண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டம், பந்துவீச்சில் மிரட்டல்
# ஆப்கனை வீழ்த்தியது இலங்கை

**கொழும்பு, பெப்.21**
**ஆப்கனுக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் இலங்கை அணி 72 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. மூன்று ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் இலங்கை அணி 2:0 என்ற ரீதியில் தொடரைத் தன் வசமாக்கியுள்ளது.**



இலங்கை - ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி-20 ஆட்டம் தம்புள்ள சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கன் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது.

சதீர சமரவிக்ரம, அஞ்சலோ மத்யூஸ் ஆகிய இருவரும் கடைசி ஓவர்களில் வெளிப்படுத்திய அதிரடி ஆட்டமே இலங்கைக்கு கணிசமான மொத்த எண்ணிக்கையைப் பெற்றுக்கொடுத்தது.

பத்தும் நிஸ்ஸன்க (25 ஓட்டங்கள்), குசல் மெண்டிஸ் (23 ஓட்டங்கள்) ஆகிய இருவரும் 23 பந்துகளில் 45 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர். அவர்களின் பின்னர் இணைந்த தனஞ்சய டி சில்வாவும் சதீர சமரவிக்ரமவும் 3ஆவது விக்கெட்டில் 37 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். தனஞ்சய 14 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

முதலாவது ஆட்டத்தில் அதிரடியாக அரைச் சதம் குவித்த வனிந்து ஹசரங்க இந்தப் போட்டியிலும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 9 பந்துகளில் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களம் புகுந்த சரித் அசலன்க (4 ஓட்டங்கள்) நீண்டநேரம் தாக்குப் பிடிக்கவில்லை. அதன்பின்னர் சதீர சமரவிக்ரமவுடன் ஜோடி சேர்ந்த அஞ்சலோ மத்யூஸ் நிதானத்துடன் துடுப்பாட்டத்தை




ஆரம்பித்தார்.

முதல் 12 பந்துகளில் 9 ஓட்டங்களைப் பெற்ற அவர் அதன் பின்னர் 10 பந்துகளில் 30 ஓட்டங்களை விளாசி 42 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

அவர் 4 சிக்ஸர்களையும் 2 பவுண்டரிகளையும் விளாசினார். மறுபக்கத்தில் நிதானம் கலந்த வேகத்துடன் துடுப்பெடுத்தாடிய சதீர சமரவிக்ரம 42 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 51 ஓட்டங்களைப் பெற்று கடைசிப் பந்தில் ஹிட் விக்கெட் முறையில் ஆட்டம் இழந்தார்.

பந்துவீச்சில் மொஹமட் நஜீப் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுளையும், அஸ்மத்துல்லா ஓமர்ஸாய் 40 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

188 ஓட்டங்கள் என்ற மிகவும் கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 17 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வி அடைந்தது. கரிம் ஜனாத் (28 ஓட்டங்கள்), மொஹமட் நபி (27 ஓட்டங்கள்) ஆகிய இருவரே ஆப்கானிஸ்தான் சார்பாக 25 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

அஞ்சலோ மத்யூஸ் தனது முதல் இரண்டு ஓவர்களை மிகவும் துல்லியமாக வீசி 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளைப் கைப்பற்றி ஆப்கானிஸ்தானுக்கு நெருக்கடியைக் கொடுத்தார். பினுர பெர்னாண்டோ 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், வனிந்து ஹசரங்க 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், மதீஷ பத்திரண 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இந்த ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் வீரர் நஜிபுல்லா ஸத்ரானின் விக்கெட்டை வீழ்த்திய வனிந்து ஹசரங்க தனது 63ஆவது போட்டியில் 100ஆவது விக்கெட்டைக் கைப்பற்றினார். சர்வதேச ரி-20 கிரிக்கெட்டில் தொடரில் லசித் மாலிங்கவுக்கு அடுத்ததாக 100 விக்கெட்டுகளை வீழ்த்திய இரண்டாவது இலங்கை வீரர் வனிந்து ஹசரங்க ஆவார். சர்வதேச ரி-20 அரங்கில் 100 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய 11ஆவது வீரராவார். ஆட்ட நாயகனாக அஞ்சலோ மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டார். (எ)

## தன்பாலின திருமணம் கிரேக்கத்தில் சட்டபூர்வம்

உரோம், பெப். 21
தன் பாலின திருமணத்தை சட்டபூர்வமாக்கும் சட்டத்தை கிரேக்க நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

இதன்மூலம் அனைவருக்கும் திருமண சமத்துவத்தை நிறுவும் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ நாடாக கிரீஸ் முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருமண சமத்துவத்தை சட்டமியற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் கிரீஸ் 16 ஆவது நாடாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## நவால்னிக்கு அஞ்சலி 400 பேர் கைது

மொஸ்கோ, பெப். 21
சிறையில் உயிரிழந்த ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னிக்கு அஞ்சலி செலுத்திய 400 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்த நாட்டின் மனித உரிமை அமைப்பொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

ஊழல், தேசத்துரோகம் உள்ளிட்ட குற்றங்களுக்காக 20 ஆண்டுகளுக்கும் மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நவால்னி சிறையில் அண்மையில் உயிரிழந்தார்.

இந்த நிலையில் நவால்னியின் மறைவுக்கு ரஷ்யாவின் பல நகரங்களில் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிகழ்வுகளில் பங்கேற்ற 400 க்கும் மேற்பட்டோரே கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## பேருந்து விபத்துகள் லண்டனில் அதிகரிப்பு

லண்டன், பெப். 21
பிரிட்டனின் தலைநகர் லண்டனில் அண்மைக்காலமாக பேருந்து விபத்துகள் அதிகரித்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் லண்டனில் பேருந்துகள் சம்பந்தப்பட்ட விபத்துகளில் 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர் என லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் அமைப்பொன்று சுட்டிக்காட்டியுள்ளது. (ம)



## பற்றியெரிகிறது சிலி!

சிலியில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்ட காட்டுத்தீ தற்போதுவரை அங்கு தீவிரமாகப் பரவி வருகின்றது.

சிலி வால்பரைசோவின் மத்திய பகுதியில் காட்டுத் தீ பரவி வருகின்றது. இந்தத் தீவிபத்தில் சிக்கி இதுவரை 160 பேர் உயிரிழந்துள்ளனர். காட்டுத்தீயினால் கடற்கரை சுற்றுலாத் தளமான வினா டெல் மார் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 200 பேர் காணாமற்போயுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவர்களில் சிலர் இறந்துவிட்டமை உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் இன்னமும் பலர் தேடப்பட்டு வருகின்றனர். காட்டுத்தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இரண்டாயிரம் தீயணைப்பு வீரர்கள் மற்றும் ஆயிரத்து 500 இராணுவச் சிப்பாய்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் 55 ஹெலிகொப்டர்களும், 150 வாகனங்களும், 20 விமானங்களும் தீயணைப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு"**
>
> **பொருள்:** வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழவேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.
>
> **- வள்ளுவர்**



# மொழியின் மறைவு இனத்தின் அழிவே!

இன்று உலக தாய்மொழிதினம். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

**ஆர்.பிரகாஷ்**

கடந்த 2010ஆம் ஆண்டில் அந்தமான், நிக்கோபர் தீவுகளில் வாழ்ந்த சுமார் எண்பத்தைந்து வயதான போவசர் என்ற போ பழங்குடிப் பெண் இறந்து போனாள். உலகின் மாபெரும் சோக நிகழ்வுளில் ஒன்று இது. உலகில் தினம்தினம் பல்லாயிரம் மக்கள் இவ்வுலகை விட்டுப்பிரிந்து செல்கின்றனர். இவ்வாறிருக்கையில், அந்த மூதாட்டியின் இறப்பு மட்டும் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது? என்ற கேள்வி எழுகின்றதல்லவா! ஏனெனில் அந்த மூதாட்டி மட்டுமே தனது தாய்மொழியான போ மொழியை அறிந்திருந்த கடைசிப் பெண். அவளின் மறைவோடு போ மொழிக்கும் இறப்பு நிகழ்ந்துவிட்டது. ஏனெனில் அந்தப் பழங்குடி இனம் சுமார் 65 ஆயிரம் வருட வாழ்க்கை அனுபவத்தைப் பெற்றிருந்த இனம்.

### மொழிகளின் பிரதிநிதிகள்

1970ஆம் ஆண்டில் 'பெரும் அந்தமானிகள்' என்று குறிப்பிடப்பட்ட பத்து அந்தமான் பூர்வக்குடிகளைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேரை போர்ட் பிளேயர் அருகில் சிறு தீவில் இந்திய அரசு குடியேற்றியது. அவர்களுக்கு உணவுப் பொருள்களையும் மாதம் உதவித்தொகையாகப் பணமும் வழங்கியது. இந்தப் பழங்குடிகள் மதுப் பழக்கத்துக்கு ஆட்பட்டனர். புதிய



நோய்களின் தாக்கத்தால் பெரும்பாலான பழங்குடிகள் விரைவிலேயே இறந்து போனார்கள். தற்போது மிஞ்சி நிற்பது வெறும் 52 பேர் மட்டுமே. அவர்களில் போவாசர் மட்டுமே போ மொழியின் கடைசிப் பெண். அந்தமான் தீவுகளின் வடக்குப் பகுதியைத் தாயகமாகக் கொண்டிருந்த போ மொழியின் மறைவு ஆயிரக்கணக்கான ஆண்டு கால ஒட்டுமொத்த வாழ்க்கை அனுபவத்தையும் சாகடித்துவிட்டது. இதுபோன்றே 1976ஆம் ஆண்டில் தான்சானியாவில் ஆசக்ஸ் மொழியும் 1992ஆம் ஆண்டில் துருக்கியில் டெநிக் எசன் என்ற மனிதனின் இறப்போடு உபய் மொழியும் 2003 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் அக்கல சாமி என்ற மொழியும் மரித்துப்போயின. 2008 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் அலாஸ்காவில் மரியா ஸ்மித் ஜோன் என்பவரின் சாவோடு இயாக் மொழியும் இறந்துபோனதை யுனஸ்கோ உறுதிசெய்துள்ளது.

உலகில் சுமார் 7 ஆயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றில் 78 சதவீத மக்கள் பரவலாக அறியப்பட்ட 83 மொழிகளைப் பேசுகின்றவர்கள். மீதிமுள்ளவர்கள் ஆதிக்குடிகள் என்று அறியப்பட்ட மக்கள். இவர்கள் சிறு குழுக்களாக வாழ்ந்துவருபவர்கள். இவர்களில் பெரும்பாலானவர்களின் மொழிகளுக்கு எழுத்து வடிவம் இருப்பதில்லை. வாய்மொழியாக ஒரு தலைமுறை மற்றொரு தலைமுறைக்கு அந்த மொழிகளைத் தந்துசெல்கிறது. இந்த மொழிகளும் இயற்கையான அடிப்படை இலக்கணப் பண்புகளைக் கொண்டுள்ளன. இலக்கணங்கள் மனித மனங்களில் இயற்கையாகவே உள்ளதாக மொழியியல் அறிஞர் நோம் சாம்ஸ்கி குறிப்பிட்டது இப் பழங்குடி மக்களின் மொழிகளுக்கும் பொருந்தக்கூடியது.

### மொழிகளின் இறப்புக்கு வழிகோலுதல் கூடாது

ஒரு மொழி பேசும் மக்கள் அந்த மொழி பேசுவதைக் கைவிடுவது அல்லது அந்த மொழியின் வடிவங்களைச் சிதைப்பது மற்றும் அடுத்த தலைமுறையினருக்கு அந்த மொழியைக் கொண்டுசெல்லாது விடுவது அல்லது குறிப்பிட்ட அந்த மொழிக்கு அரசும் ஊடகங்களும் தரும் முக்கியத்துவம்குறைதல், அந்த மொழியில் உள்ள படைப்புகள் ஆவணப்படுத்தல் குறைதல் போன்ற நிகழ்வுகள் ஒரு மொழியைச் சாகும் தருவாயில் உள்ள மொழியாகக் கருத இடம் தருகின்றன.

முக்கியமாக, குறிப்பிட்ட மொழி பேசும் மக்களுக்கு அந்த மொழி மீதான ஈர்ப்பின்மை அந்த மொழியின் அழிவில் பெரும்பங்கு வகிப்பதாக யுனெஸ்கோ நிறுவனம் கருதுகிறது. இந்த வகைப்பாட்டின்படி உலகில் வேகமாக மொழிகள் செத்துக்கொண்டிருக்கும் நாடுகளில் முன்னணி வகிப்பது இந்தியா. தற்போது சுமார் 850முதல் 900 மொழிகள் வரை பேசப்படும் இந்திய நாட்டில் 1961ஆம் ஆண்டில் ஆயிரத்து 600 மொழிகள் பேசப்பட்டுவந்ததாக ஆய்வறிக்கைகள் உறுதிசெய்கின்றன.

உலகில் ஒவ்வொரு 14 நாளிலும் ஒரு மொழி தனது சாவை எதிர்கொண்டிருக்கிறது. அல்லது சாவுக்கான பாதையைத் தேர்ந்தெடுக்கின்றது. இந்தச் சாவை மனிதகுலம் தனது குழந்தையையோ அல்லது ஆசானையோ இழக்கும் ஒரு சாவாகவே நாம் கருதவேண்டும். மொழியின் சாவு என்பது மனிதகுல வரலாற்றின் மறைவே தவிர வேறென்ன?

### தமிழ்மொழியின் தனித்துவம்

எமது தாய்மொழியான தமிழ், திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மூத்த மொழியாகும். திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய மொழிகளும் தமிழிலிருந்தே பிறந்தன. தமிழ்மொழி ஐயாயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக்கொண்ட, பழைமைவாய்ந்ததொரு தொன்மையான மொழி. இதனை வைத்துப் பெருமை கொள்வதா? அல்லது அந்தப் பெருமையைக் கட்டிக்காப்பதா? என்பது இன்று தமிழ்கூறும் நல்லுலகில் மீள்பரிசீலனை செய்யத்தக்க ஒரு முக்கியமான விடயங்களாகும். அத்தகைய ஒரு கட்டத்தைத் தமிழ் கூறும் நல்லுலகு எதிர்நோக்கியும் உள்ளதும் வெளிப்படையான விடயமே. ஏனெனில் தமிழின் இயல்பான நடை அல்லது இயற்கையான பாணி மெல்ல மெல்லக் கதியற்றுச் செல்லும் அவலம் அரங்கேறியுள்ளது. தமிழைத் தாய்மொழியாகப் பேசுவோரே தமிழைக் கொல்லவும், பிறமொழி ஊடுருவல்களால் அமைந்த செயற்கை மொழிக் கையாட்சியைப் புகுத்தவும் தலைப்பட்டுள்ளனர். உறுப்பமைந்த எழுத்துகளிலிருந்தும், இலக்கண முறைகளிலிருந்தும், இயற்கை நடையிலிருந்தும், நேரிய வழக்குகளிலிருந்தும் விடுபட்டு, எங்கெங்கோ இரவல் பெற்ற மாற்றான் தாய் வழக்குகளுக்குச் செயற்கைச் செழுமையூட்டியதன் விளைவாக, புழக்கத்திலும் பழக்கத்திலும் தமிழ் கதியற்றுத் தவிக்கின்றது.

எமது மூதாதையர் செய்த அரிய சாதனைகளான அறநூல்கள், காப்பியங்கள், காவியங்கள், இலக்கியங்கள் போன்றவற்றை இயற்றமுற்படாது போனாலும், அவர்களின் வழிவந்த மொழிப் பாவனையையாவது நாம் கட்டிக்காத்தல் அவசியமல்லவா?. அவர்கள் இலக்கியம் படைத்து எமது மொழியின் வரலாற்று இருப்புக்குச் சான்று வழங்கினர். நாம் அதன் அழகையாவது கெடுக்காமல் இருப்பது தானே தகுந்த கைமாறு. ஏனெனில், எமது தாய்மொழியான தமிழ், மொழிகளின் தாயும்கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி**
*நிகழ்ச்சித்திட்ட தலைவர்*
*சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,*
*முகாமைத்துவம்,*
*யாழ்.பல்கலைக்கழகம், இலங்கை*



# வணிக வளர்ச்சியில் சங்கப் பெண்கள்

தோற்றம் மறைவு, இரவு பகல் போன்ற எதிர்நிலைகள் உலக இயக்கத்துடைய உந்துதலாகவும், ஏன் கருப்பொருளாகவும் இருப்பது போல் ஆண்,பெண் என்கிற பால்வகுப்பும் இயற்கையின் நியதியின் வாயிலாக உருவாக்கப்பட்ட ஒருமையின் இருவேறு நிலைகளேயாகும். மனித குலத்தோற்றத்துக்கு இவ்விரு வேற்றுமை நிலைகளும் முழுமையின் சமகூறுகளாக உருவாக்கம் பெற வேண்டியவையே இதுவே இயற்கையின் நியதியும் கூட: இயற்கையின் படைப்பினாலும் அறிவார்ந்த பார்வைவழி உறுதிப்படுதலினாலும் பெண்களால் மட்டுமே தாய்மையடைய முடியும். இதனால் பெண்கள் எப்பொழுதும் தமிழ்ச் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாகவே நோக்கப்படுகின்றார்கள். இருந்தபோதும் சங்க காலத்துக்குப் பின்னரே பெண்களின் சிறப்புகள் சமூகவியல் நோக்கில் குறைவடையத் தொடங்கியது. இந்தக் கட்டுரையில் பின்வரும் முக்கியமான விடயங்கள் ஊடாக பெண்களின் வகிபாகம் ஆராயப்படுகின்றன:

- சங்க இலக்கியத்துக்கு ஓர் அறிமுகம்
- பெண்ணியம்
- சங்க இலக்கியத்தில் பெண்கள்
- வணிக மாந்தர்கள்

**1. சங்க இல்க்கியத்துக்கு ஓர் அறிமுகம்**

இந்திய இலக்கியங்களில் சங்க இலக்கியங்கள் மிகவும் தொன்மையானவையாகும். பண்டைத்தமிழனின் அறிவுசார் புலமையியலினை அறிந்துகொள்ள ஆதார சுருதியாகவும் அடையாளமாகவும் இவை அமைந்துள்ளன. ஆதலால் அவை போற்றுதலுக்குரியனவாகவும் காணப்படுகின்றது. இன்றும் போற்றவும் படுகின்றன. சங்க இலக்கியங்கள் வடமொழி இலக்கியங்களின் பிரதிபலிப்புகள் எதுவுமின்றி தனித்துவமானதும் புதிய பாணியிலான இலக்கிய மரபுகளின் வாயிலாக நீட்சியடைந்த உன்னதமான படைப்புகள் ஆகும். சங்க இலக்கியங்கள் தமிழ் மொழியின் சிறப்பினை இயம்புகின்ற ஒன்றாகவோ அன்றி பண்டைய மொழி வழக்கை அறிந்துகொள்ள உதவும் கருவூலமாகவோ மட்டும் இருந்துவிடவில்லை. மாறாக, தமிழர்களின் தொன்மையான பண்பாட்டின் அடிப்படை அம்சங்களினைப் புரிந்து கொள்ளவும் மேலும் வாழ்க்கைநெறி, வாழ்வியல் சித்தாந்தங்கள், வரலாறு, அரசியல், பொருளாதார, சமூக, வணிகக் கட்டமைப்புகள் போன்றவற்றினை அறிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் அடிப்படைகளைக்கொண்ட ஓர் உருவமற்ற மரபுரிமைகளின் தொகுப்பே சங்க இலக்கியங்களாகும். இவ் இலக்கியமானது உள்ளார்ந்த நிகழ்வுகளுக்கும், மனரீதியான உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் வழங்கும் அகம் பற்றியும் வீரம்,நாட்டுப் பற்று மற்றும் போர் போன்ற புறம்சார்ந்த நிகழ்வுகளுக்கும் அதி தீவிரமான முக்கியத்துவம் வழங்குவதுமான செயற்றிறன் கொண்டதனால் புறம்பற்றியும் பேசுவதனாலும் உலக இலக்கியங்களில் முதன்மையானதாகவும், அதிகளவிலான பல்பரிமாண நோக்கல்களுடன் மேலும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட இலக்கியங்களாகவும் அமைந்துள்ளன. சங்க காலத்தினை வரையறை செய்வது சற்றுக்கடினம். என்றாலும் சங்க இலக்கியங்கள் என்பதற்குள் எட்டுத்தொகை (நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, புறநானூறு பரிபாடல்) மற்றும் பத்துப்பாட்டு (திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்) என்பன உள்ளடக்கப்படுகின்றன. ஆனாலும் பரந்த பாரதத்தின் வரலாற்றில் திராவிடரின் பங்களிப்பு, அவர்களின் வகிபாகம் பற்றி அறிதலுக்கான வாய்ப்புகள் அரிதாகவேயுள்ளன என்றவாறன புலமைவாதிகளின் கருத்தாகும். இந்த குறைபாட்டினை சங்க இலக்கியங்களினைப் புரிதலின் மூலம் நிவர்த்தி செய்துகொள்ளலாம். உலகில் தோன்றிய நாகரிகங்கள், அரசியல், சமூக, பொருளாதார மற்றும் வணிகக் கட்டமைப்புகள் மேலும் சமூக வாழ்வியல் என்பன குறித்து ஆய்வுக்குட்படுத்தப்படுகின்ற போது மாற்றுக் கருத்துக்கு இடமின்றி, விவாதிக்கப்பட வேண்டிய கருத்துகளாக தமிழர் தொன்மையும், பண்பாடும் விளங்குகின்றது. தமிழர் பண்பாடு என்பது தொடர்ச்சியான கற்றலின் வாயிலாகவும், செயற்பாட்டின் வழியாகவும், வரன்முறை வழியாகவும் தமது முன்னோரிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கும் தமிழர் வாழ்வியல் நடைமுறைகள், தமிழர் பண்பாட்டின் அடையாளங்கள் மற்றும் தமிழர் வாழ்வின் ஓர் அங்கமாகப் பிணைந்திருக்கிறது அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருசேர உள்ளடக்குகின்றது.



**1.1 சங்கம் பற்றிய அறிதல்**

சங்கம் என்ற பதத்தின் தோற்றுவாய் மற்றும் அதன் பிரயோகங்கள் குறித்தும், சங்ககாலம் தொடர்பான காலவரையறை குறித்தும் வாதப் பிரதிவாதங்கள் இன்றுவரை எழுந்த வண்ணம் உள்ளன. அவை அறிவியல் உலகில் இன்றும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. சங்கம் என்ற சொல்லின் சொற்பிறப்பியலைப் பற்றி விளங்கிக் கொள்வது என்பது வணிக வளர்ச்சியில் சங்க காலப் பெண்களின் வகிபாகம் புரிந்து கொள்வதற்கு அறிவாராய்ச்சியல் அணுகுமுறையின் தேவை அவசியமாகிறது. அப்போதுதான் இவை குறித்த தேடலும், புரிதலும் மிகவும் முக்கியமானதாக அமையும். சங்கம் என்ற பதமானது வடமொழிப் பதமாகும். இதன் பிரயோகமானது சங்கப் பாடல்களில் ஒரு சிலவற்றில் இருந்த போதும் அங்கு சங்கம் என்ற பதம் குறித்த கருத்தும், இன்று அறிவுசார் நிபுணர்களின் 'சங்கம்' குறித்த கருத்தியலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக பரிபாடலில் 'நெய்தலும், குவளையும், ஆம்பலும், சங்கமும், மைஇல் கமலமும், வெள்ளமும் நுதலிய' இப் பாடல் வரிகளில் சங்கம் என்பது புலவர்களும், சான்றோர்களும் ஒன்று சேர்ந்து இருந்து தமிழ் வளர்த்த இடத்தை குறிக்கவில்லை. சங்கம் என்ற பதமானது பௌத்த, சமண மதத்தவர்களினால் அதிகளவில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டது. பௌத்த சமண கொள்கைகள், தத்துவங்கள் போன்றனவற்றின் விரைவான பரவலுக்கும், அதன் வளர்ச்சிக்கும் சங்கம் ஓர் அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தது. அதனால்தான் புத்த பகவானின் சுலோகங்களில் (திரிசரணம்) 'சங்கம்' என்ற பதம் காணப்படுகின்றது. 'சங்கம் சரணம் கச்சாமி' என்ற திரிசரணத்தின் படி சான்றோர்கள், ஆன்றோர்களின் சங்கமமே சங்கம் என்பதற்கு சாட்சியாகின்றது. காப்பியங்களில் மணிமேகலையில் சங்கம் என்ற சொல்லானது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்களின் எழுச்சியும், பக்தி இலக்கியங்களின் தோற்றமும்; அதிகரித்தது. அதாவது 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் தேவாரம், திருவாசகம், நன்நெறி, வெண்பாக்கள்,ஆழ்வார்கள் பாசுரங்களான திவ்வியபிரபந்தங்கள் போன்ற பத்தி இலக்கியங்களில் சங்கம் என்ற பதம் அழகுறக் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம்.

சங்கத்துக்கு கூடல், சபை, தொகை, குழாம், அவை, புணர், எனவும் பொருள் கொள்ளலாம். தமிழ் ஆய்ந்த வல்லுநர்கள், அறிஞர்கள் பலர் கூடி ஆய்வு ரீதியாக முடிவினை எடுக்கும் இடத்தினைக் கூடல் என்று அழைப்பார். ஆதலால் தான் மாணிக்கவாசகப் பெருமான் 'கூடலின் ஆய்ந்த ஒண் நீதத்தமிழ்' என்கிறார். சங்க காலத்தில் புலவர்கள் கூடி ஆராய்ந்து தமிழ் வளர்த்தனர் என்பதற்கு சங்கப் பாடல்களில் சில சான்றுகள் உள்ளன.

**1.2 பெண்ணியம்**

சங்கமருவிய காலத்தில் பௌத்த மதத்தத்துவங்களினதும், சமண மதத்தத்துவங்களினதும் ஆதிக்கமானது மேல் ஓங்கியதன் விளைவாக பெண்களுக்கான முக்கியத்துவம் சற்றே குறைவடைந்து காணப்பட்டது. சமணமதம் பெண்களினை பாவத்தின் அடையாளம் என்றும் பெண்களுக்கு வீடுபேறில்லை என்றும் ஆடவர் பேரின்பம் முத்தியினை அடைவதற்கு பெண் பேதையினருடனான உறவுகள் தடையாக அமையும் என்றும் சமணம் வலியுறுத்துகின்றது.

இந்து மதம் வேதகாலத்தில் பெண்களுக்கு அதிகளவு உரிமையினை வழங்கியமையினை இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் போன்ற வேதங்கள் வாயிலாகப் புரிந்துகொள்ளமுடியும். பொதுவாக வேதங்கள் சமய மற்றும் ஒழுக்கக் கருத்துகளினைப் போதிப்பதாக இருந்தாலும் அங்கு பால்நிலை பால் சமத்துவம் பற்றிய குறிப்புகளும் இடம்பெறவே செய்கின்றன. இத்தகைய உள்ளடக்கங்களையே சமூகம்சார், மருத்துவம்சார், வீரம்சார், பொருளாதாரம்சார் காதல் சார் கருத்துகளையும் மேலுமாய் பால் நிலை, பால் சமத்துவம் குறித்த கருத்துகளையும் உப வேதங்களும் வெளிப்படுத்துகின்றன. தைத்திரிய உபநிடதத்தில் 'பரம்பரை அழிந்து போகாமல் இருக்க இல்லறம் நடத்துவது பெரும் புண்ணியம்' எனக்குறிப்பிடுகின்றது. ஆனால் மனுதர்ம கோட்பாட்டின் கருத்துப் பரவல்கள் தமிழ் மண்ணில் இடம் பெற்றதன் விளைவாக சமூகக் கட்டமைப்புகளில் குறிப்பாக ஆடவர், பெண்டிர் உறவுகளில் பெரிய அளவிலான மாறுதல்கள் ஏற்பட்டன.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெற்றோருடைய குடும்ப மேம்பாடே பிள்ளைகளின் ஆரோக்கியம்

பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி

சிறந்த குடும்பத்தில் இருந்தே சிறந்த பிள்ளைகளை உருவாக்கிக் கொள்ளமுடியும். ஏனெனில் குடும்பத்தில் இருந்துதான் அன்பு, ஒழுக்கம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, ஒற்றுமை, ஆன்மீகம் என்பன கட்டியெழுப்பப்படுகின்றன. இது சரியான முறையில் குடும்பத்தில் ஜொலிக்குமாயின் சமூகம் சிறந்த முறையில் பிரகாசிக்கும். மாறாக குடும்பம் ஜொலிக்காது விட்டால் சமூகம் இருளாகிவிடும். எனவே ஒவ்வொரு தனிமனிதச் செயற்பாட்டின் அதி உச்ச வினைத்திறனே குடும்பத்தை வளர்ச்சியடையச் செய்யும். குடும்பம் என்பது தனித்து மனித உயிர்களின் பிறப்பில் தங்கியுள்ளது மட்டுமன்றி பொருளாதாரம், சுகாதாரம், பழக்கவழக்கம், ஆளிடைத் தொடர்புகள், கலாசாரம், கல்வி, பண்பாடு என்பவற்றின் மேன்மையிலும் தங்கியுள்ளது.

குடும்பம் என்பது கணவன் மனைவியுடன் ஆரம்பமாகின்றது. இந்த ஆரம்பமானது அன்பினால் பிணைக்கப்பட்டு, ஆசையால் அரவணைக்கப்பட்டு புதிய உறவுகளைப் பிரசவிக்கின்றன. கணவன் மனைவியிடம் இருக்கும் ஆழ்ந்த பிணைப்பு காலம் செல்ல குறைந்து செல்கின்றபோது, குடும்பத்தில் பகைமை விதை விழுகின்றது. எப்போது நாம் ஒருவரை எம்மில் இருந்து வேறுபட்டவர் என எண்ணுகிறோமோ அப்போது அவற்றில் இருந்து எம்மை விலக்கிக் கொள்கிறோம். ஏனெனில் இந்த வேறுபாடும் விலக்கலும் தான் பகைமை உணர்வை ஏற்படுத்துகின்றன. இது நாளடைவில் போராட்டத்துக்கு வழி அமைத்துவிடுகின்றது. ஒரு போராட்டத்தின் ஆரம்ப கர்த்தா எப்போதுமே ஒரு தனிமனிதன் தான்.

### தனிமனித உணர்வே போராட்டத்தின் விதை

ஒரு மனிதனுக்குள் ஏற்படும் பகைமை உணர்வின் விளைவு தான் போராட்டத்துக்கு விதையாகின்றது. இந்த விதை மரமாவதோ அல்லது இன்னொரு விதைக்கு உரமாவதோ தவிர்க்க முடியாததாகும். விதை மரமானால் போராட்ட வடிவத்தை அடைந்துவிடுகிறது. உரமானால் இன்னொரு போராட்டவிதை மரமாவதற்கு உறுதுணையாக அமைந்துவிடுகிறது. பகைமை உணர்வு என்ற விதை என்ன வடிவத்தை எடுத்தாலும் ஆபத்தானதே. குடும்பத்தின் அடிநாதம் அன்பு. அன்பின் தளம் நட்பு. நட்பின் தளம் புரிந்துணர்வு. புரிந்துணர்வின் தளம் நிபந்தனையற்ற ஏற்றுக்கொள்ளல். நிபந்தனையற்ற ஏற்றுக்கொள்ளல் என்பது உள்ளதை உள்ளபடி உள்வாங்குதல் இவ்வாறு செயற்படும் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். பிள்ளைகள் ஆரோக்கியமாக வளர்வார்கள்.

பெற்றோர் தம்மை அர்ப்பணித்துச் செயற்படவேண்டும். திருமணமாகிய முற்பகுதியில் குழந்தைகளைப் பிரசவிப்பதற்கு எவ்வாறு விருப்புடனும், ஆசையுடன் இரண்டறக்கலந்து பாலும் தேனும் போல அன்புவார்த்தைகளைப் பயன்படுத்துகின்றோமோ அதே அன்னியோன்னியம் குழந்தை வளர்ப்பிலும், வளர்ச்சியிலும் இருக்க வேண்டும். மாறாகப் பெற்றோர்களின் விட்டுக்கொடுப்பற்ற செயற்பாடு தனிமனித முன்னேற்ற முயற்சிகள், யார் பெரியவர்கள், அதிக வருமானத்தைப் பெறுவோர், பதவியில் உயர்ந்தவர் தனது குடும்பப் பின்னணியைப் பின்பற்றச் சொல்லல் மிகைப்படுத்தப்பட்டால் குடும்பத்தில் விரிசல் ஏற்படும்.

இவ்வாறு ஏற்படும் விரிசல்களை பிள்ளைகள் உணர்ந்து கொள்ளும்போது உளநெருக்கீட்டுக்கு உள்ளாகின்றனர். இதனால் மகிழ்ச்சியைத் தொலைக்கிறார்கள், கல்வியில் ஆர்வம் குறைவடையும், ஆரோக்கியம் பாதிக்கப்படும், முயற்சி தடைப்படும் மொத்தத்தில் பிள்ளைகள் அனுபவிக்கவேண்டிய காலத்தை இழக்கின்றனர். இதனைப் பெற்றோர் உணர்ந்து செயற்படவேண்டும்.

### எதற்கும் ஆரம்பம் குடும்பமேதான்

குடும்பம் என்பதை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒரு நாட்டின் அபிவிருத்தியில் மிக முக்கியமான செல்வாக்குச் செலுத்துவது குடும்பம். நாட்டுக்குத் தேவையான நல்ல பிரஜைகளை உருவாக்குவதற்கு அடித்தளமிடுவது குடும்பம்.

பெற்றோர் பிள்ளைகளை அன்பாகவும், பண்பாகவும், கரிசனையான கண்டிப்புடனும் வளர்க்கவேண்டும். பிள்ளைகளை ஆசைக்கு வாழப் பழக்கப்படுத்தாது தேவைக்கு வாழப்பழக்கப்படுத்த வேண்டும். ஆசை என்பது வரையறையற்றது தேவை என்பது வரையறைக்குட்பட்டது.

ஆசை என்பதை திறக்கவேண்டும் என ஆசைப்பட்டார் புத்தபெருமான். எனவே ஆசை என்பது எம்மில் சவாரி செய்து கொண்டே இருக்கும் அதற்கு கடிவாளம் இடவேண்டும். 'ஆசை என்பது மாயக்குழி அதனையாராலும் நிரப்பிவிடமுடியாது. நிரப்ப நிரப்ப அது வெறும் குழியாகவே இருக்கும்' என்றார் ரூசோ.

இதனைக் கருத்திற்கொண்டு தேவைகளை உணர்த்தி பிள்ளைகளை வளர்க்கவேண்டும், சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், மற்றவர்களுக்கு உதவிசெய்யும் பழக்கத்தை ஏற்படுத்தல், சுய உற்பத்திகளை உருவாக்க ஊக்கமளித்தல், ஏழ்மையை உணர்ந்து மற்றவர்களை மதித்து வாழ பெற்றோர் பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டும். குடும்பத்தில் தாயின் பங்கு மிகவும் முக்கியமானது. அதனால் தான் 'தாயில் சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்று சொல்லுவார்கள். ஒரு குடும்பம் சிறந்து விளங்குகின்றது என்றால் அங்கு தாயின் பங்கு அதிகமாகவும் தந்தையின் மந்திரம் செவிசாய்க்கப்படுகின்றதே என்றே எண்ணவேண்டும்.

பெற்றோரின் ஒற்றுமை பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உரமாகின்றது. எனவே குடும்பத்தில் சிறந்த தாயின் மூலமே விவேகானந்தர் உருவானார். விஞ்ஞானி ஜஸ்ரின் உருவானார். உலகத்துக்கே ஒளி பாய்ச்சிய எடிசன் உருவானார் என்பது வரலாற்று எடுத்துக்காட்டு.



### பிள்ளைகளுடன் நேரம் செலவிடுக

பெற்றோர் பிள்ளைகளுடன் தமது நேரத்தைச் செலவு செய்வதுடன் நம்பிக்கை ஏற்படும் வகையில் நடந்துகொள்ளவேண்டும். சிறந்த போசனைமிக்க உணவுகளை வழங்கி ஆரோக்கியம் உள்ளவர்களாக ஆளுமைமிக்கவர்களாக ஆற்றல்களை வெளிப்படுத்தக் கூடியவர்களாக உருவாக்க முனையவேண்டும்.

பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுங்கள் அப்பொழுது நீங்களும் குழந்தைப் பருவத்தின் அப்பாவித்தனத்துக்குத் திரும்புவதற்கான வாய்ப்பை பெறுவதுடன் உடல், உள, ஆரோக்கியத்தையும், குடும்ப மேம்பாட்டையும் கட்டியெழுப்பமுடியும்.

அதேபோல் குடும்பமாக ஒன்றாக இருந்து ஒருவேளை உணவையாவது உண்ணப்பழக்கிக் கொள்ளல் வேண்டும். இந்த நேரத்தில் தொலைக்காட்சி பார்ப்பதையோ, தொலைபேசி பேசுவதையோ நிறுத்தி குடும்ப எதிர்காலத்துக்கான திட்டமிடலை சேர்ந்து கதைக்கும்போது பிள்ளைகளும் உரிமையுடன் தம்மைத் தயார்ப்படுத்துவதுடன் குடும்ப சிந்தனையில் இருந்து வெளிச்சிந்தனைக்குச் செல்லமாட்டார்கள். குடும்பத்தில் தேவையற்ற பேச்சு மற்றவர்களைக் குறைகூறல், முரண்பாடு, பழிவாங்குதல், புறங்கூறும் செயற்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ளல்வேண்டும். அதற்குப் பதிலாக ஒற்றுமையையும், முயற்சியையும் கட்டியெழுப்புங்கள். மாற்றத்துக்கான சிந்தனையை விதையுங்கள். குடும்பம் பிரகாசிக்கும். பிள்ளைகளும் ஆரோக்கியமாக வாழ்வார்கள். ■

## வதையும் உயிர்

அன்றும் இன்றும்
பெண்ணின் நிலையென்ன?
இன்பமளிக்கும்
இனியவளவளோ?
குடும்பக் கட்டமைப்பைக்
குற்றமறச் செதுக்கி
இடுக்கண் சுமக்கும்
இகத்தின் பேரழகி
ஆடைகள் களைந்து
ஆகுதியாகி
பாடையில் போகும்வரை
பாசமழை
பொழிகிறாளே!
உயிரை வதைக்கும்
உலுத்தோர் முன்னே
உயிரும் உதிரமுமீந்து
உயிரைப்
பிரசவிக்கிறாளே!
இதைவிட எதைச்சொல்ல?
இவளன்றோ தெய்வம்!
பாசத்தின் வேரினை
மனிதத்தில் ஓடவிட்டு
வேசங்கள் நடமிட
வெம்புமனச் சுமைகளோடு
கொட்டு மின்பமெல்லாம்
கோடியென்றே புலம்பி
சொட்டுச் சொட்டாய் விலகிச்
சோர்வு கொள்ள
உள்ளுணர்வுகள் மௌனித்து
உருக்குலைந்து சுயமிழந்து
வாழும்நிலை மறந்து
வேரறுத்த மரமாய்
பாழும் மாந்தர்முன்
பாவையவள் பதறியே
அடியற்றுச் சாய்கிறாளே!
அவள்நிலை என்சொல்ல?
உலகப் பெருவெளியில்
உறங்கும் உண்மைகள்
காலங் காலமாய்த்
தொடரும் அவலங்கள்
பெண்ணியத்தின் கருப்பொருள்
பெண்ணிவள் என்றும்
மண்ணிடை உயிர்க்கு
மகத்தான பொக்கிசம்
காலில் சக்கரம்
பூட்டியவளாய்
ஓய்வின்றிச் சுழன்று
பணிசெய்து
ஆணவம் மிகுந்த
ஆணாதிக்கத்தின்
தோள்களில்
பிணமாய் ஊர்வலம்
போகிறாளே அவள்
துயர் சொல்லிட
வார்த்தையில்லை

உடுவிலூர்கலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் பிராந்தியமாக இலங்கை மாற இடமளியோம்



## பெரமுன தெரிவிப்பு

**கொழும்பு, பெப். 21**

**வரலாற்றில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போரிட்ட நாடுதான் இலங்கை. எனவே, இலங்கை ஒருபோதும் இந்தியாவின் பிராந்தியம் ஆகாது. அதற்கு நாம் இடமளிக்கவும் மாட்டோம் - என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

இந்தியாவின் பிராந்தியமே இலங்கை என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்த கருத்துத் தொடர்பில், பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை என்பது இறைமையுள்ள சுயாதீன நாடாகும். எமது நாடு ஒருபோதும் இந்தியாவின் பிராந்தியமாகாது. அவ்வாறு செய்வதற்கு எவரேனும் முற்பட்டால் அதற்கு இடமளிக்கமாட்டோம். வரலாற்றில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போரிட்ட நாடுதான் எமது நாடு. பொலநறுவை, அநுராதபுர யுகங்களின்போது இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக எமது மன்னர்கள் சமரிட்டுள்ளனர். ஹரின் பெர்னாண்டோ எமது கட்சி உறுப்பினர் அல்லர். அவர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர். அவர் வெளியிடும் கருத்துத் தொடர்பில் நாம் கணக்கில் எடுப்பதில்லை. அவ்வாறான நபர்களிடம் காத்திரமான கருத்துகளை எதிர்பார்க்க முடியாது" - என்றார். (அ-ம-44)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் தொழில்வாய்ப்புச் சந்தை

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் தொழிற்சந்தை நிகழ்வு கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட வளாகத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழிற்றுறைத் தொடர்பு மையம் மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு ஆகியவை இணைந்து இந்தத் தொழில்வாய்ப்புச் சந்தையை நடத்துகின்றன என்று முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தையில் கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழில்நுட்பம், தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 43 தொழில் வழங்குநர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தவிர, தொழில் தேடும் இளைஞர், யுவதிகள், உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்கள் உட்பட ஆர்வமுடைய சகலரும் பங்குபற்றித் தொழில்வாய்ப்புகள் பற்றிய அறிவைப்பெற முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-ச-26)

# வடக்கு - கிழக்கு மக்களுக்காக அரசாங்கத்திடம் திட்டமில்லை!

## சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 21

வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு இந்த அரசிடம் எந்தவொரு ஏற்பாடும் இல்லை. ஜனாதிபதித் தேர்தலை குறிவைத்து தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றுவதற்கு ஜனாதிபதி முற்படுகின்றார். ஆனால், அரசியல் தீர்வுக்கான ஏற்பாடுகள் இடம்பெறாவிடின் அடுத்த தேர்தலில் தோல்வி நிச்சயம் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் இந்த நாடாளுமன்றத்தில் சட்டமூலங்கள் முன்வைக்கப்படுவதில்லை. அதாவது வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு இந்த அரசிடம் எந்தவொரு ஏற்பாடும் இல்லை.

சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தவே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முன்மொழிவை அரசு முன்வைத்துள்ளது. இதற்கான சட்டமூலத்தை வடக்கு - கிழக்கு மக்கள் நிராகரித்துள்ளனர். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவைப் பொறுத்தளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதற்குரிய எந்தவொரு வாய்ப்பும் இல்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் சிவில் அமைப்புகள் என்பன இதனை நிராகரித்துள்ளன.

அரசியல் அதிகாரம் எங்களுக்குத் தரப்படவேண்டும். ஒரு புதிய அரசமைப்பின் ஊடாக இதற்கான ஏற்பாடுகள் இடம்பெறவேண்டும். இது விடயத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை. வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்தப்படுகின்றது என ஜனாதிபதி நேற்று (நேற்றுமுன்தினம்) கூறியுள்ளார். ஆனால் குச்சவெளிப் பகுதியில் உள்ள விகாரைகள் பற்றி ஜனாதிபதி செயலகத்தில் பேசப்பட்டுள்ளது. குச்சவெளியில் வாழும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதைவிட 4 விகாரைகளைப் பற்றிப் பேசுவதே அவர்களுக்கு முக்கியமானது.


ஜனாதிபதித் தேர்தலை குறிவைத்து தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார். அரசியல் தீர்வை வழங்குவதற்கு இந்த வருடத்துக்குள் ஆரம்பகட்ட ஏற்பாடுகளை செய்யாவிட்டால் இந்த அரசு என்ன பொய்களைச் சொன்னாலும் மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாது" - என்றார். (ம-44-26)

# புலிகளின் தங்கம்: ஏமாற்றமே மிச்சம்!

முல்லைத்தீவு, பெப். 21

முல்லைத்தீவு, கிளிநொச்சி வீதியில், கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, றெட்பானா சந்திக்கு அருகில் உள்ள காணியில் அரைக்கும் ஆலையின் கட்டடத்துக்குள்ளும் காணிக்குள்ளும் தங்கப் புதையல் இருப்பதாகத் தெரிவித்து அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவ்வாறு எந்தப் பொருளும் மீட்கப்படாததையடுத்து பணிகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமைய, கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு நேற்றுமுன்தினம் இந்த அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டாம் நாளாக நேற்றும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் அவ்வாறு எந்தப் பொருள்களும் கிடைக்கப்பெறாததையடுத்து பணிகள் இடைநிறுத்தப்பட்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. இதையடுத்து தோண்டப்பட்ட குழிகளை மூடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அகழ்வுப் பணிகளின்போது இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-19-113)





மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக சாணக்க வக்கும்புர நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று அவர் தனது பதவியைப் பொறுப்பேற்றார். (ம-26)

## பொது அறிவித்தல்

### வலிகாமம் வடக்கு பிரதேச சபை
### காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

**கீரிமலை நகுலேஸ்வரா ஆலய உற்சவகால தினங்களுக்கானதும், சிவராத்திரி தினத்திற்கான தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல்**

கீரிமலை நகுலேஸ்வரா உற்சவகால, சிவராத்திரி தினங்களுக்கான தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் 21.02.2024 புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 22.02.2024 வியாழக்கிழமை மாலை 4.00 மணிவரை தெல்லிப்பளை உப அலுவலகத்தில் அல்லது கீரிமலை வாகனத் தரிப்பிடத்தில் ரூபா 200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பகிரங்க ஏலம்**

உற்சவகாலக் கடைகள் 1 ஆம் கட்டமாக எதிர்வரும் 23.02.2024ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கும், 2ஆம் கட்டமாக கடைகள் எதிர்வரும் 05.03.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கும் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்

**குறிப்பு:**

- சித்திபெற்ற கேள்விதாரர்கள் உடனடியாகவே அதற்கான குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தினையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.
- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும், உற்சவ காலத்துக்குப் பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ள முடியாது.
- உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

**க.சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை.**
21.02.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு அந்தோனியார் பெருவிழாவுக்கு முன்னேற்பாடுகள் அனைத்தும் முழுமை

## யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 21

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாடுகள் யாவும் முழுமை பெற்றுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

கச்சதீவுத் திருவிழா தொடர்பில், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமாலை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில், பாதுகாப்புத் தரப்பினர், அரச அதிகாரிகள், இந்தியத் தூதுவர்கள், மதகுருமார்கள், பிரதேசமட்ட பொது அமைப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மாவட்டச் செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில், திருவிழாவுக்காக சுமார் 7 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்களில் இந்தியாவிலிருந்து 3 ஆயிரத்து 500 பேரும், இலங்கையில் இருந்து 4 ஆயிரம் பேரும் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உணவு வழங்கல் விடயம் ஆரம்பத்தில் நெடுந்தீவு பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்தப் பணி கடற்படையிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. கச்சதீவுப் பகுதி நெடுந்தீவு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசம் என்ற அடிப்படையில் நெடுந்தீவு பிரதேசசபை தனது பணிகளை அங்கு முன்னெடுக்கும். நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கம் விற்பனை நிலையம் ஒன்றை அமைக்கும். உணவு விற்பனையில் ஈடுபட விரும்புவோர் நெடுந்தீவு பிரதேசசபைக்கு முன்னதாக அறிவித்து அனுமதி பெற்று கச்சத்தீவில் பணியில் உள்ள சுகாதார பிரவின் அனுமதிபெற்று விற்பனையில் ஈடுபடமுடியும்.

ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி, வேலணை, ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி, மலேரியா தடுப்புப் பிரிவினர், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையின் குழுவினர் சுகாதாரப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

**போக்குவரத்து ஏற்பாடு**

நெடுந்தீவு மற்றும் குறிகாட்டுவான் ஆகிய துறைமுகங்களிலிருந்து தனியார் படகுகள் மூலம் சேவையில் ஈடுபடலாம். மேலும் இம்முறை ஊர்காவற்றுறையும் பயணத்தை மேற்கொள்ளும் இறங்குதுறையாக அனுமதிக்கப்பட்டுள்ளது. குறித்த இறங்குதுறைகளில் கடற்படை மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பணியில் ஈடுபடுத்தபடுவர். தனியார் படகுகளில் வருபவர்கள் அவர்களது தனிப்பட்ட பாதுகாப்புக் கருதி அந்தந்த கடற்படை முகாம்களில் பதிவினை கட்டாயம் மேற்கொள்ளவேண்டும். இது குறித்து பங்குகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முறையைப் போல இருவழிக் கட்டணத்தையும் ஒருபடகிற்கு செலுத்தாது செல்லும் பொழுதும் வருகை தருகின்ற பொழுதும் தனித்தனியே கட்டணங்களை அறவிடலாம். 23ஆம் திகதி காலை 5 மணியிலிருந்து 10 மணிவரை படகுச்சேவை இடம்பெறும். கச்சதீவுக்கான முதலாவது படகு காலை 6 மணிமுதல் சேவையில் ஈடுபடும்.

வடதாரகை படகு அத்தியாவசிய சேவைகளுக்காக இலவச சேவையில் ஈடுபடும். இதேவேளை - இவ்வருடம் படகுகளின் தரத்தினை பரிசோதனை செய்யும் நிறுவனம் 34 படகுகளைச் சோதனையிட்டு 29 படகுகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்முறை வழமையைப்போல அன்றி கச்சதீவு திருவிழாவில் பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. எரிபொருள் செலவீனம் மற்றும் இதர பொருளாதார செலவீனங்களை மட்டுப்படுத்தும் முகமாக பெரும்பாலும் கடற்படை சேவையில் ஈடுபடவுள்ளது.

**இதர சேவைகள்**

வழமைபோல பொலிஸார் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், சுகாதார பிரிவினர், சுங்கப் பிரிவினர், நடமாடும் நீதிமன்றத்தினர், சிறைச்சாலைப் பிரிவினர் என அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

நாணய பரிமாற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்குமுகமாக இலங்கையின் இரண்டு அரச வங்கிகளான இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பனவும் சேவையில் ஈடுபடவுள்ளன. இந்தியா, இலங்கைக்கு வருகை தரும் இந்திய யாத்திரிகர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அதற்கேற்ப ஏற்படும் செலவீனத்துக்கு அமைய இலங்கை அரசாங்கத்துக்கு நிதியினை வழங்கவுள்ளது - என்றார். (ம-125)

**வீடு வாடகைக்கு உண்டு**

தொல்புரம் மேற்கில், வீடு வாடகைக்கு உண்டு.
2 அல்லது 3 பேர் விரும்பத்தக்கது.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு:- 075 497 3042
(CS.54067) J-1



**ஸ்ரீமுதலி (மனோன்மணி) அம்பாள் ஆலயம்**
**ஆலய கட்டுமானப்பணி அறிவித்தல்**

கடந்த 11.09.2023 இல் பாலஸ்தாபனம் செய்யப்பெற்ற புலோலி கிழக்கு, சந்தாதோட்டம்
ஸ்ரீமுதலி (மனோன்மணி) அம்பாள் ஆலயத்தில்
மூலஸ்தாபனம் மற்றும் அர்த்த மண்டபம்
என்பன வடிவமைக்கப்படவுள்ளன.
எனவே கட்டடத் தொழில் அனுபவமுடைய வல்லுநர்களும்,
இத் தொழிலில் தகுதி உடையவர்களும்
எதிர்வரும் 28.02.2024 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

க. ராகீஸ்வரன்
தலைவர்,
ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலயம்
சந்தா தோட்டம், புலோலி
கிழக்கு, புலோலி.

தொடர்பு:
077 784 6126
(cs.27972) (N-1)

60 ஆவது அகவைகாணும்
எமது ஆசானுக்கு மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



திருமதி
**புஸ்பராணி கந்தசாமி**
(B.A, PGDE (merit), Primary Trd)
சிரேஸ்ட ஆசிரியர்
யா/ கரம்பை அ.மி.த.க. பாடசாலை

**சேவை விபரம்:**
- 17.08.1988 - 19.01.1992 யா/ இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை
- 20.01.1992 - 31.12.1993 கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
- 01.01.1994 - 31.12.2003 யா/ இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை
- 01.01.2004 - 01.02.2015 யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்
- 02.02.2015 - 03.01.2016 யா/ இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை
- 04.01.2016 - 20.02.2024 யா/ கரம்பை அ.மி.த.க.பாடசாலை நாவற்காடு. வரணி

ஆசிரியப் பணியில் உயர்வுபெற்று 20.02.2024 இல் இருந்து ஓய்வுபெற்ற
தங்கள் ஓய்வுக்காலம் சிறந்தோங்கி நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்,
**யா/ கரம்பை அ.மி.த.க. பாடசாலை வரணி**

**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)**
**கிளைகளுக்கான கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்**

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் துணைவிதி பிரிவு 20.1.5 இற்கமைய சங்கத்தின் பின்வரும் கிளைகளுக்கான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் உரிய காலத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க தகமையுடைய அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெறாதவர்கள் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்கள் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.

தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.

இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும்பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்**

| தொ. இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர்கள் | திகதி நேரம் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | இராஜசிவம் தனுசன் | 25.02.2024 மு.ப.10.30 | யாழ்கோ பிள்ளையார் கிளை நிலையம் இல.672 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அருகாமை) |
| 02 | தென்மராட்சி | கனகரத்தினம் வட்சன் | 25.02.2024 மு.ப.10.30 | சாவகச்சேரி ப.நோ.கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், கண்டி வீதி, சாவகச்சேரி |
| 03 | காரைநகர் | இரத்தினராசா கஜந்தன் | 25.02.2024 மு.ப.10.30 | காரைநகர் ப.நோ.கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், சுற்று வீதி, காரைநகர் |

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்
857, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
2024.02.20
(cr.41852) (N-1)

ஒப்பம்: கிறகோரி சந்திரசேகரன்
கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு : 25.07.1955 இறப்பு : 21.02.2014

## அமரர் வீரசிங்கம் செல்வநாதன்

(ஓய்வு நிலை இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

வையகம் போற்ற வாழ்ந்து
வானுறையும் தெய்வமதாய்
இயற்கையில் இணைந்து
பழுதில்லாப் புது மலராய் - என்றும்
எம் இதயங்களில் மணம் வீசும்
அன்பு நிறை அப்பாவே!
ஆண்டுகள் பத்து ஆனதே
எமைப் பிரிந்து
நீறாகிப் போனாலும் நீங்களே திசைகாட்டி
நித்திய வாழ்வினில் நீங்கா நிறையுரு
அணையாது ஒரு போதும்
நாம் கொண்ட பாசம்
தேயாமல் வளருமிது தெய்வீக பாசம்
இயற்கையின் அசைவுகளில் - உம்
உணர்வுகளை நுகர்ந்து
உம் பாதம் மலர் தூவி வணங்குகின்றோம்.

**என்றும் உங்கள் நினைவு சுமந்து**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(cs.54057) (N-1)

## வாள்வெட்டில் மாணவர்கள் இருவர் காயம்!

யாழ்ப்பாணம், பெப். 21

பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டில் மாணவர்கள் இருவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வீதியால் சென்றவர்கள் மீதே வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.
(ம-100)

# 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01.06.1946



உதிர்வு 10.02.2010

## திருமதி ருக்மணி நடராசா

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அம்மாவே!
ஆண்டுகள் பல ஆனாலும்
ஆறவில்லை எமது துயரம் அம்மா...

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

138 A, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**என்றும் உங்கள் நினைவில்:**
**நடராசா (கணவர்)**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(cs.54066) (N-1)

# மரண அறிவித்தல்

## திருமதி வெற்றிவேலு அரியபூமணி (மலர்)

மீசாலை வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும், வேம்பிராய்ச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வெற்றிவேலு அரியபூமணி (மலர்) 17.02.2024 சனிக்கிழமை அமரத்துவமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், சதாசிவம் வெற்றிவேலு அவர்களின் அன்புத்துணைவியாரும், காலஞ்சென்ற மகேந்திரம் அன்னபூமணி (பிரான்ஸ்) மற்றும் வேலுப்பிள்ளை இராசபூமணி (லண்டன்), செல்லத்துரை ராசமணி, இராமநாதன் தயாழாதேவி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இந்திரவதனி, ஜெயஸ்ரீ, ஜெயகுமார் (இத்தாலி), சிவக்குமார் (சுவிஸ்), உதயகுமார் (லண்டன்), விஷயகுமார் (லண்டன்), விஷயகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் மார்க்கண்டு, மோகனதாசன், தெசீர் (இத்தாலி), யோகமலர் (சுவிஸ்), குனேந்திரா (லண்டன்), சுதாஜினி (லண்டன்), சந்திரலிங்கம் (Srilanka Telecome Staff) ஆகியோரின் அன்பு மாமியாரும் மாதீஸ் (பிரான்ஸ்), அனுஜன் (இந்தியா), கோபிதா (முல்லைத்தீவு வல்லிபுர மகா வித்தியாலயம்), ஆனந்தகுமார் மாலதி (லண்டன்), தினேஷ் (பிரான்ஸ்), மகிந்தன் பிரியங்கா, நிதர்ஷன் (கனடா), யாதவன் (பிரான்ஸ்), ஆந்திரேயா (இத்தாலி), சினுசன் கிறிஸ்டினா (சுவிஸ்), சினுசியா (சுவிஸ்), நிறோசன் மகிஷா (லண்டன்), யதுசன் (லண்டன்), கனுஜன் (லண்டன்), துர்க்கா (லண்டன்), கஜினி (லண்டன்), கஜேந்திரகுமார் பகிஷா (அமெரிக்கா), யானுராஜ் சாளினி (பிரான்ஸ்), சதுஷா, அபிநயா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் வேம்பிராய்ச்சந்தியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய்ச்சந்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 226 9885**
**077 075 5760**

**மீசாலை வடக்கு,**
**மீசாலை,**
**வேம்பிராய்ச்சந்தி.**

(CS/54055) J-1



**தோற்றம் 23.10.1945**
**மறைவு 17.02.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிறுமியோடு சென்ற சிறுவன்'

# சிறுவனின் பெற்றோரே முதலில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், பெப். 21

15 வயதுச் சிறுமியுடன் குடும்பமாக ஒன்றாக இருந்தார் என்ற சந்தேகத்தில் 17 வயதான சிறுவன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளான்.

குறித்த சிறுவன் 14ஆம் திகதி இரவன்று காணாமற்போன நிலையில், இது தொடர்பில் 15ஆம் திகதி சிறுவனின் பெற்றோரே முதலில் பொலிஸ் முறைப்பாட்டை வழங்கியதுடன், சிறுவன் எங்கிருக்கின்றான் என்பது தொடர்பில் தாமும் தேடுதலை மேற்கொண்டனர். இதன்போது, அந்தச் சிறுவன் 15 வயதுடைய சிறுமியுடன், சுழிபுரம், நெல்லியானில் உள்ள சிறுமியின் சகோதரியின் வீட்டில் ஒன்றாக வாழ்வதாகத் தெரிந்து கொண்டதையடுத்து அந்த வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

சிறுவனின் உறவினர்கள் அந்த வீட்டுக்குச் செல்லும்போது வீட்டின் உரிமையாளர்கள் (சிறுமியின் சகோதரி குடும்பத்தினர்) அங்கிருக்கவில்லை. ஆனால் பூட்டப்பட்ட வீட்டுக்குள் சிறுவனும் சிறுமியும் இருந்துள்ளனர். இதையடுத்து அறையை உடைத்துக்கொண்டு சிறுவனை அவர்கள் அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன்பின்னர் சிறுமியின் தரப்பிலிருந்தும் பொலிஸாரிடம் முறைப்பாடொன்று வழங்கப்பட்டுள்ளது. சிறுவனைக் கைது செய்து நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியுள்ளனர். (அ-ம)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி

# மாவட்டச் செயலர்களின் சேவைநீடிப்பு நிராகரிப்பு!

கொழும்பு, பெப். 21

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டச் செயலர்களின் சேவைநீடிப்பு அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலரான றூபவதி கேதீஸ்வரன் கடந்த 12ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான மாவட்டச் செயலர் பதவிநிலை வெற்றிடமாகியுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரான அம்பலவாணர் சிவபாலசுந்தரனின் பதவிக்காலமும் மார்ச் மாதம் 8ஆம் திகதியுடன் முடிவுக்கு வரவுள்ளது.

இந்த நிலையில் இவர்கள் இருவரின் பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீடிப்பதற்கு அமைச்சரவையில் நேற்றுமுன்தினம் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அது அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டுள்ளது. (ம)

# தனியார் பேருந்தின் அவசரமே பெண்ணைக் காவுவாங்கியது!

அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் தனியார் பேருந்தில் இருந்து தவறி வீழ்ந்த பெண்ணொருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தங்கரத்தினம் தனஸ்வரி (வயது-46) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். தனியார் பேருந்தில் இருந்து இறங்க முற்பட்ட வேளை, பேருந்தின் சாரதி அவசரமாக பேருந்தை நகர்த்தியமையால் அவர் கீழே வீழ்ந்து படுகாயங்களுக்கு உட்பட்டார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு அவர் உயிரிழந்தார்.

எனினும் உதயனின் நேற்றைய பதிப்பில், குறித்த பெண் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் இருந்து வீழ்ந்தார் என்றுதவறுதலாகப்பிரசுரமாகியுள்ளது. (அ-ம)

## பயங்கரவாத...

மேற்படி பிரிவுகளை நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் அவசியம் எனவும், அவ்வாறு இல்லாவிட்டால் உயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள திருத்தங்கள் ஏற்கப்படவேண்டும் எனவும் நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு வேளையின்போதே பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபைக்குத் தெரியப்படுத்தினார்.

மேலும், உயர்நீதிமன்றத்தால் சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களுக்கு இணங்கினால் மாத்திரம் சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமூலத்தைச் சட்டமாக நிறைவேற்றமுடியும் என்றும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. (அ-ம-44)

## பிள்ளையையும்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக்குழு எடுத்திருந்த தீர்மானங்களுக்கு எதிராகவும் தேசிய பேராளர் மாநாட்டுக்கு எதிராகவும் திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் பெறப்பட்டுள்ள இடைக்கால நீதிமன்றக் கட்டாணைகள் தொடர்பாக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கடந்த 16ஆம் திகதியன்று ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையில் கட்சியின் தலைவர்களும் வழக்கின் எதிராளியாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் தனது சகாக்களும் கேட்டுக்கொண்டால் கட்சிக்காக அவர் முன்னிலையாகுவதற்குத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டு இருந்தார்.

இந்த அறிவிப்பு சட்ட நுணுக்கமற்ற சிறுபிள்ளைத்தனமானது என்பது சட்டம் தெரிந்த யாவருக்கும் இலகுவாகப் புரியும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் தமிழரசுக் கட்சிக்குப் புதிதாகத் தேர்வான தலைவர் சிவஞானம் சிறீதரனுக்கு ஜனவரி மாதம் 31ஆம் திகதி எழுதப்பட்ட கடிதம் ஊடகங்களில் பிரசுரமாகியிருந்தது.

யாழ்ப்பாணத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில், வழக்காளியான பீட்டர் இளஞ்செழியன் 'வ4' என்று அடையாளமிடப்பட்டு அந்தக் கடிதத்தை ஓர் ஆவணமாக இணைத்துள்ளார். எனவே அந்த வழக்கு, விசாரணைக்கு எடுக்கப்படும் வேளையில் சுமந்திரன் நீதிமன்றத்துக்கு ஒரு சாட்சியாகவே அழைக்கப்பட முடியும். வழக்கின் சாட்சியாக அழைக்கப்படும் எவரேனும் அந்த வழக்கில் மற்றைய எதிராளிக்காக முன்னிலையாவது நடைமுறையில் சாத்தியமற்ற விடயமாகும். ஏனெனில் ஒரு வழக்கில் சாட்சியாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவர் அதேவழக்கில் சாட்சியமளிக்க மட்டுமே முடியும்.

அத்தோடு திருகோணமலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 6ஆம் எதிராளியாக சுமந்திரன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே எதிராளி தனக்குத் தானே வாதாட முடியுமே தவிர கட்சிக்காகவோ அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள பிற எதிராளிகளுக்காகவோ எக்காரணம் கொண்டும் வாதாடுவதில்லை. அவர் தன்னைக் காத்துக்கொள்ள தனக்காக மட்டுமே வாதாடமுடியும். மேலும் தனக்காக வாதாடுபவர்கள் சாட்சியம் அளிக்கும் சூழ்நிலையும் உருவாகலாம்.

ஒரு நடைமுறைச் சாத்தியமற்ற விடயத்தை எந்த நீதிமன்றமும் அனுமதிப்பதும் இல்லை. கடைப்பிடிப்பதுமில்லை. சட்டத்தின் அடிப்படைகள் மேலோட்டமாகத் தெரிந்த ஒருவரால் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய இந்த விடயத்தை, ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் பிரதான விடயத்தைத் திசை திருப்புவதற்காகக் கையாண்டு வருவதானது பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவிக்கும் செயற்பாடாகும் - என்றுள்ளது. (அ-ம)

## டிப்பரின்...

கிளிநொச்சி - பூநகரி, பரமன்கிராய் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். பூநகரி, வினாசியோடையைச் சேர்ந்த பரராஜசிங்கம் உதயகுமார் (வயது - 54) என்பவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

மோட்டார்சைக்கிள் மற்றும் டிப்பர் என்பன நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் ஒன்றுடன் ஒன்று மோதியதில் மோட்டார்சைக்கிளில் சென்றவரான உதயகுமாரே உயிரிழந்தார். அவருடன் சென்ற மற்றொருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பில் டிப்பர் சாரதியைக் கைது செய்த பூநகரிப் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கள்ளமணல் ஏற்றிக்கொண்டு அதிவேகமாகச் சென்ற டிப்பரே, மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியதாக ஊர்வாசிகள் தெரிவித்தனர். (அ-ம-26)

## இந்தியத்...

நேற்றுக்காலை போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு மீனவ சங்கங்கள் இணைந்து இந்தியத் துணைத்தூதரகத்தை முற்றுகையிடப் போவதாக அறிவித்திருந்ததால் அந்தப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. மீனவர்கள் தூதரகத்தை முற்றுகையிட முனைந்ததையடுத்து அந்தப் பகுதியில் பொலிஸாருக்கும் மீனவர்களுக்கும் இடையே சிறு பதற்றம் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து மீனவர் சங்கப் பிரதிநிதிகள் 7 பேர் மட்டும் துணைத்தூதரகத்துக்குள் சென்று, மனுவைக் கையளித்தனர். தொடர்ச்சியாகப் போராட்டக்காரர்கள் இந்திய, இலங்கை அரசுகளுக்கு எதிராக பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்துக் காகச் சிறையிடப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறும் இல்லையேல் தாம் கச்சதீவுப் பெருவிழாவைப் புறக்கணிக்கப்போவதாகவும் இந்திய மீனவர்கள் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், இந்தியத் துணைத்தூதரகத்துக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் ஈழ மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை பரபரப்பாகியுள்ளது.

(அ-ம-26-100-125)

## வாள்வெட்டில்..

இரவு இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் ஐவர் காயமடைந்தனர்.

இரண்டு குடும்பத்தினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மிளகாய்த்தூளை வீசிவிட்டு பின்னர் வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் ஐவர் காயமடைந்த நிலையில் அவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களாக மூவர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ-ம-214-113)

## கிளிநொச்சியில்..

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக நேற்று மு.ப. 10.30 மணியளவில் ஆரம்பித்த இந்தப் போராட்டம், டிப்போச் சந்தியில் நிறைவுற்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவேண்டும், காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் சர்வதேச விசாரணைகளே தேவை என்ற விடயங்களைப் போராட்டக்காரர்கள் முன்னிறுத்தினார்கள்.

ஆன்மீகத் தலைவர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளரான பிரகீத் எக்னலிகொடவின் மனைவி, பெரும்பான்மையின மக்கள் உள்ளிட்ட பலரும் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

(அ-ம-214-113-27)

## களமிறங்கிய...

ஒருவரும் கலந்துகொண்டுள்ளார்.

போராட்டம் ஆரம்பமான இடத்திலிருந்து மக்களுடன் மக்களாகப் பேரணியில் கலந்துகொண்டு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு அவர் வலியுறுத்தியமை பலரின் கவனத்தை ஈர்க்கும் விடயமாக அமைந்திருந்தது. பௌத்த தேரர் மட்டுமல்லாமல் பெரும்பான்மை இனமக்கள் சிலரும் இதில் கலந்துகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-214-113-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சங்கானைப் பிரதேசத்தில்

# பஸ் சேவை வழித்தடங்களை மாற்றியமையுங்கள்



**யாழ்ப்பாணம், பெப்.21**

**சங்கானைப் பிரதேசத்தில் சேவையில் ஈடுபடும் பஸ் சேவையைப் பொதுமக்கள் செறிந்துவாழும் பகுதியூடாக மேற்கொள்ள வேண்டும் என்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பாக யாழ்.பார்வையற்றோர் அறக்கட்டளை நிலையத்தின் பொருளாளர் ரங்கடம்பநாதன் தெரிவித்ததாவது: வலி. மேற்குப் பிரதேசத்தில் 784, 782, 785, 786 ஆகிய தடவழிப் பேருந்துச் சேவைகள் நடைபெறுகின்றன.

பொன்னாலை, நெல்லியான் மக்கள் முச்சக்கரவண்டி மற்றும் சைக்கிளில் மூளாய் மருத்துவ மனைக்குச் சென்று பஸ் சேவையைப் பெற்று யாழ்ப்பாணம் நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது.

எனவே 785 மற்றும் 786 தடவழி பஸ்சேவையைப் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வீதியூடாக சேவையில் ஈடுபடுத்தவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் இலங் கைப் போக்குவரத்துச்சபை இந்த விடயம் தொடர்பில் கவனம் எடுக்கவேண்டும் என்று பொறுப்பு வாய்ந்த அதிகாரிக்கு அறிவுறுத்தினார். (எ-125)

## பௌத்த மதத்துக்கு முன்னுரிமையில்லை

### சஜித் சாடல்

கொழும்பு, பெப். 21

பௌத்த மதத்துக்கு உரிய முறையில் முன்னுரிமை வழங்க இந்த அரசாங்கம் தவறிவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

அநுராதபுரத்தில் கடந்த சனிக்கிழமை அவர் இதனைத் தெரிவித்தார்.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஏனைய மதங்களுக்கும் பொருத்தமான இடம் வழங்கப்படவேண்டும் என அரசமைப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும் மிஹிந்தலை ரஜ மகா விகாரையின் மின்சாரம் கூடத் துண்டிக்கப்பட்டுள்ளது. பௌத்த பிக்குகள் மேற்கொள்ளும் சமய சேவைகள் உட்பட ஏனைய சேவைகளையும் சூட்சுமமாக நிறுத்த அரச கட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். (ச-இ)

## பரிசளிப்பு விழா

சிறுப்பிட்டி, பெப்.21

சிறுப்பிட்டி மேற்கு, அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயமும் நாகதம்பிரான் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் கலை விழா மற்றும் பரிசளிப்பு விழா என்பன ஆலய முன்றிலில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

ஆலயத் தலைவர் வி. சுரேந்தர் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன், சிறப்பு விருந்தினராக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம், கௌரவ விருந்தினர் களாக சிறுப்பிட்டிமேற்கு, ஜே/272 கிராமஅலுவலர் திருமதி ஜெனிதா சிவதீபன் மற்றும் சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர் திருமதி சசிலேகா ஜெயராசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ப)

## விவசாயிகளுக்கு 'எயார் கன்'

யாழ்ப்பாணம்.பெப்.21

யாழ். மாவட்டத்தின் பதினைந்து பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 48 விவசாயிகளுக்கு யாழ். மாவட்ட விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 'எயார் கன்' (வாயுத்துப்பாக்கி) விநியோகம் செய்யப்படவுள்ளது. பயிர்ச்செய்கையை விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென யாழ். மாவட்ட விவசாயப் பிரிவுக்கு விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக குறித்த துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-125)


## மரண அறிவித்தல்

தோற்றம்
02
12
1951



மறைவு
18
02
2024

### அமிர்தலிங்கம் ஞானேஸ்வரி

கட்டுவன் மேற்கு தெல்லிப்பளையினை பிறப்பிடமாகவும் அச்செழு வடக்கு நீர்வேலியினை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் ஞானேஸ்வரி அவர்கள் கடந்த (18.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அமிர்தலிங்கம் (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நவரத்தினசோதி மற்றும் இராசகுலசிங்கம் (UK), தர்மகுலசிங்கம் (வவுனியா, அகில இலங்கை சமாதான நீதிவான்), சிவநேசசிங்கம் (நோர்வே), சதானந்தவதனா, குகானந்தவதனா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சுப்பையா மற்றும் வனசலோஜினி (UK), விஜயலதா (வவுனியா), பிறேமசாந்தி (நோர்வே), புவனயோகேஸ்வரன் (உடுவில்- ஓய்வுபெற்ற ஊழியர், சீமேந்து கூட்டுத்தாபனம்), ஸ்ரீகரன் (மீசாலை- ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற ஈஸ்வரலிங்கம் மற்றும் அற்புதலிங்கம், நவரட்ணலிங்கம் (சுன்னாகம்), ஜெகதீஸ்வரி (சுன்னாகம்), ரதீஸ்வரி (அச்செழு) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அஜந்தா (நோர்வே), பிரதீபா (கனடா), துஸ்யந்தன் (அவுஸ்திரேலியா), ருஜாந்தன் (இ.போ.ச. கோண்டாவில்), தர்ஷிகா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்கினேஸ்வரன் (நோர்வே), சுதர்சன் (கனடா), பிரதீபா (ஆசிரியை, கிளி/ இந்துக் கல்லூரி), ருபேந்திரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லக்சிகா, திவாரகா, லக்சனா, விஷ்னுஜன், விபுஜன், விதுர்சன், ரக்ஷிகன், சஸ்வின் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு வடக்கு, நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
077 698 8996

(CS 27978)A-1

## காணி விற்பனைக்கு

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அருகாமையில்
தபால் கந்தோர் வீதியில் 200m தூரத்தில்
இருபக்க பாதை வசதிகளுடன் 12 பரப்பு 16 குளி காணி
விற்பனைக்கு உண்டு - தெளிவான ஆவணங்களுடன்.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்.

தொடர்பு:- 077 136 2490

(CS/54059) J-1

## விசா ஆலோசனை மற்றும் Show Money வசதிகள்

கனடா நாட்டிற்கான விசா ஆலோசனை மற்றும் சகல நாடுகளுக்குமான Show money வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

074 173 7684

(CS 27974) V-1

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

### af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

## பேஸ் காணவில்லை

கல்லுண்டாய் வீதியில் செல்லும் வழியில் எனது பேஸ், சாரதி அனுமதிப்பத்திரம், தொழில் அடையாள அட்டை, வங்கி அட்டைகள், மற்றும் சிறு தொகைப் பணம் சகிதம் தொலைந்துவிட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ்குறிப்பிட்ட இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும். அல்லது இந்த விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். **சன்மானம் உண்டு**

விலாசம் { இல-18, சிவன் வீதி (உபதபால் அலுவலகம் அருகில்) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 399 3185

CS (27973) V-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 21.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org